பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 02 வெள்ளிக்கிழமை (15.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## நாடு முழுவதும் ஞாயிறு ஊரடங்கு

(கொழும்பு)


நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங் 15

## கொரோனா பலியெடுப்பு 3 இலட்சத்தைத் தாண்டியது

45 இலட்சம் பேர் பாதிப்பு
45 ஆயிரம் பேர் கவலைக்கிடம்



(ஜெனிவா)

உலகம் முழுவதும் கொடிய கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுடன் 3 இலட்சத்தைத் தாண்டியது. 03

# கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட இந்தியா விருப்பம்

## இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சம்பந்தனை தொலைபேசியில் அழைத்துத் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட இந்தியா எதிர்காலத்தில் தயாராக இருப்பதாக இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் சம்பந்தனை தொலைபேசியில் அழைத்து தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வட மராட்சியைச் சேர்ந்தவர் கொரோனாவால் லண்டனில் மரணம்



15

## நேற்றும் 32 பேருக்கு கொரோனா

### பாதிக்கப்பட்டோர் 925 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 32 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15

## யாழ்.பல்கலைக்கழக வாயிலில் பொலிஸாரின் தடையை மீறி தீபங்கள் ஏற்றி நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பண்பாட்டு நுழைவாயிலில் தீபங்கள் ஏற்றி நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றது. பொலிஸாரின் தடையை மீறி நேற்று இரவு 7 மணியளவில் தீபங்கள் ஏற்றி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. 15

## பொலிஸாருடன் முரண்பட்டவர்களை முழங்காலில் அமர்த்தி தாக்கிய இராணுவம்

### மருதனார் மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாருடன் முரண்பட்ட இருவரை முழங்காலில் அமர்த்தி இராணுவம் தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று மாலை மருதனார் மடத்தில் இடம்பெற்றுள்ளது. 15

## நவாலி தேவாலய முன்றலில் முன்னணி 2ஆம் நாள் முள்ளிவாய்க்கால் நினைவு



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. 15

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார் மங்கள சமரவீர

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி 15

## விடுதலைப்புலிகளின் உருவப்படத்திற்கு அஞ்சலி

### சிறீதரன் விசாரணைக்கு அழைப்பு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கரைச்சி பிரதேசசபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் ஆகிய இருவரையும் இன்று விசாரணைக்கு முன்னிலையாகுமாறு கிளிநொச்சி பொலிசார் அறிவித்தல் அனுப்பியுள்ளனர். 15

## யாழில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு மீண்டும் கொரோனா

### போதனா பணிப்பாளர் சத்திய மூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வீடு திரும்பிய 5 பேருக்கு வைரஸ் தாக்கம் சிறிதளவில் காணப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அதில் குறிப்பாக யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு - 6 பேர். இவர்கள் அனைவரும் அரியாலை பகுதியை சேர்ந்தவர்கள்.

கடந்த மாதம் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொதுத் தேர்தலுக்கு எதிரான மனுக்களை பரிசீலனை செய்ய

## ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் நியமனம்

(கொழும்பு)

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஆட்சேபனை தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலிப்பதற்கு ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்துவதற்கு ஆட்சேபனை தெரிவித்து 7 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் பிரதம நீதியரசரால் 5 நீதியரசர்கள் கொண்ட குழாம் நியமிக்கப்பட்டுள்ளது. தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாமா என்பதை அவர்கள் பரிசீலிப்பார்கள்.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய (தலைவர்), விஜித் மலல்கொட, புவனேக அலுவிஹார, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜெயவர்த்தன ஆகியோர் கொண்ட குழாமே நியமிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஆடம்பரப் பொருட்கள், கார்கள்

# இறக்குமதி செய்ய இடைக்காலத் தடை

(கொழும்பு)

இலங்கைக்கு ஆடம்பரப் பொருட்கள் மற்றும் கார்களை இறக்குமதி செய்வதற்கு அரசு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இது தொடர்பாக, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவைக்கு முன்வைத்த அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டார்.

எனினும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு எந்த தடையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அந்நியச் செலவணியை கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா நிதியத்துக்கு

# தனது 3 மாத சம்பளத்தை வழங்கினார் ஜனாதிபதி கோட்டா



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மூன்று மாதங்களுக்குரிய சம்பளத்தை கோவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அவர் தனது மூன்று மாத சம்பளமான 2 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாயை இந்த நிதியத்துக்கு வழங்கியுள்ளார்.

அதற்கான காசோலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தனது செயலாளர் பி.பீ. ஜயசுந்தர விடம் கையளித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில் கத்தியுடன் நபர் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலை வளாகத்திற்குள் சிறியளவிலான கத்தி ஒன்றினை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று மாலை நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## உரிய அனுமதியின்றி

# அதிகளவு மதுப்போத்தல்கள் கொண்டு சென்றவர் கைது

(கொழும்பு)

நெல்லியடி பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போது அனுமதியின்றி பெரு மளவான மதுபான போத்தல்களைக் கொண்டு சென்றனர் எனும் குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸார் தமது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை வீதிச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்போது நான்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அனுமதியின்றி பெருமளவான மதுபான போத்தல்களை கொண்டு சென்ற நால்வரை கைது செய்துள்ளனர். சந்தேகநபர்களால் கொண்டு செல்லப்பட்ட பெருமளவு மதுபானமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் மதுபான விற்பனை நிலையங்களை திறக்க அனுமதிக்கப்பட்டதை அடுத்து பலரும் முண்டியடித்து வரிசையில் நின்று மதுபானத்தை கொள்வனவு செய்திருந்தனர். சிலர் அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார்

# ஆலய அந்தணர்களே ஆதீன கர்த்தா என தீர்ப்பு


(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தின் உரிமை தொடர்பில் ஆலய அந்தணர்களுக்கும் பரிபாலன சபையினருக்குமிடையே கடந்த 2001ஆம் ஆண்டு தொடக்கம் மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கில் நேற்றைய தினம் ஆலய அந்தணர்களே ஆதீன கர்த்தா என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம-3)

## அரச பதவிகளில் இராணுவம்

# சர்வாதிகாரமாக நாடு செல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது

## ரணில் விக்கிரமசிங்க ஆக்ரோசம்



(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களாக, பணிப்பாளர்களாக இராணுவம் மற்றும் படைகளின் உயர் அதிகாரிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமிப்பதன் மூலம் ஜனநாயக செயற்பாடுகள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளன.

சர்வாதிகாரத்தின் பக்கம் நாடு பயணிப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. எனவே, ஜனநாயக ரீதியில் நாங்கள் எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது இல்லத்தில் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உயர் மட்டத்தினர் சிலருடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த நாள் முதல் படிப்படியாக அரச நிறுவனங்களில் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற படை வீரர்களை நியமித்து வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் அமைச்சுக்கள் திணைக்களங்களின் உயர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளார். இதில் சிலர் இராணுவ உயர் அதிகார மட்டத்தில் இருந்தவர்கள்.

ஏற்கெனவே இரு மாகாண ஆளுநராக இராணுவ உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் மிக முக்கியத்துவம் வாய்ந்த உயர் பதவிகளில் கூட படை உயர் அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி முன்னாள் படை வீரர் என்பதால் அவருக்கு நம்பிக்கைக்குரியவர்களாக படை அதிகாரிகளை தேர்ந்தெடுப்பதாக இருக்கலாம்.

ஆனால், ஜனநாயக நாட்டில் அரச நிறுவனங்களுக்கு நிர்வாகத் திறமை கொண்ட சிவில் சமூக அதிகாரிகளே நியமிக்கப்பட வேண்டும். இந்நிலை தொடர்வது நியாயமானதாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் கட்சிகள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் எம்மிடத்தில் முரண்பாடு இருக்க முடியாது.

சர்வாதிகாரத்தின் பக்கம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனநாயக ரீதியில் நாங்கள் எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (ம-3)

## போதை எடுத்துச் சென்ற

# சிவில் பாதுகாப்பு படை வீரர் கைது

(வவுனியா)

வவுனியா மடுக்கந்த பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனைக்காக எடுத்துச்சென்ற சிவில் பாதுகாப்பு படை வீரரொருவர் வன்னி பிராந்திய போதை ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்பட்ட தகவலில் அடிப்படையில் மடுக்கந்தை விசேட அதிரடிப்படை முகாமுக்கு முன்பாக நேற்று மதியம் 1.30 மணியளவில் அட்டமஸ்கட பகுதியை சேர்ந்த 36 வயதுடைய சிவில் பாதுகாப்பு படை வீரரொருவர் 1330 மில்லிகிராம் ஹெரோயினை கொண்டு சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,299)

# உலகம் முழுவதும் 3 இலட்சம் பேர் கொரோனாவால் கொன்று குவிப்பு!

## ❖45 இலட்சம் பேர் பாதிப்பு
## ❖45 ஆயிரம் பேர் கவலைக்கிடம்



(ஜெனிவா)

**உலகம் முழுவதும் கொடிய கொரோனா வைரஸ் தாக்குதலுக்குப் பலியானோர் எண்ணிக்கை நேற்று மூன்று இலட்சத்தைத் தாண்டியது.**

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 212 நாடுகளுக்குப் பரவியுள்ள இந்தக் கொடிய வைரஸ் பெரும் மனித இழப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இலக்காகி பலியானோர் எண்ணிக்கை நேற்று மூன்று இலட்சத்தைத் தாண்டியது. இதே வேளை நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி 45 இலட்சம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவியவர்களில் 24 இலட்சத்து 71 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்து 920 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 16 இலட்சத்து 57 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்குப்பின் குணமடைந்தனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரஸுக்கு உலகம் முழுவதும் மூன்று இலட்சம் பேர் உயிரிழந்தனர். (இ-4-7)

## இலங்கையர்கள் இருவருக்கு நைஜீரியாவில் பிடியாணை

(நைஜர்)

நைஜீரியாவின் சுயாதீன ஊழல் நடைமுறைகள் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பான ஆணையகம் (ஐ.சி.பி.சி) இரண்டு இலங்கையர்களை கைது செய்வதற்கான நீதிமன்ற பிடியாணை உத்தரவைப் பெற்றது.

மலேசியா குடியரசின் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திர மோசடி உள்ளிட்டவற்றுக்காக சத்தியராஜ் கந்தராசா மற்றும் வினித் உகாந்தராசா ஆகிய இலங்கைப் பிரஜைகளுக்கு எதிராகவே குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிமன்ற விசாரணைக்காக அவர்கள் இருவரும் நைஜீரியாவின், அபுஜாவின் மைதாமாவில் உள்ள நீதிமன்றில் ஆஜராகத் தவறியமைக்காக நீதிபதி ஒலசம்போ குட்லக், அவர்கள் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு ஐ.சி.பி.சி. உத்தரவு பிறப்பித்தார். (ஜ-8)

## இந்தியாவில் 78 ஆயிரத்தைக் கடந்த கொரோனா பாதிப்பு -2549 பேர் மரணம்

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 78 ஆயிரத்தைக் கடந்த நிலையில் 2549 பேர் மரணமடைந்தனர்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறுகின்றன.

கொரோனா பாதிப்பு குறைவாகவுள்ள பகுதிகளில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 78 ஆயிரத்தைக் கடந்தது. நேற்றுக் காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 3722 பேருக்குப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. 134 பேர் உயிரிழந்தனர்.

இதன் மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 549 ஆக உயர்ந்தது. 26 ஆயிரத்து 235 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வீட்டிலுள்ளவர்களை இழுத்துச் செல்ல இராணுவத்தினர் கதவைத் தட்டவாய்ப்பு

### கோட்டா அரசின் போக்கு குறித்து சஜித் அணி எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் இராணுவ ஆட்சிக்கு வித்திட்டு வருகின்றது. இதன் எச்சரிக்கையை கருத்திற் கொள்ளாமல் விநோதமடைய முயற்சிக்காதீர்கள். இராணுவத்தினர் உங்கள் வீட்டின் கதவைத் தட்ட வாய்ப்பிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுமேந்ர பெரேராவை விவசாயத் துறை அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி நியமித்தார். இராணுவத்தினரிடம் எவ்வகை ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் அரசாங்கம் தெளிவின்றி செயற்பட்டு வருகின்றது.

மருத்துவ சங்கத்தினர் வைரஸ் பரவலையும் யுத்தத்தையும் தொடர்புபடுத்தி குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தபோதும், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண்பதற்காக கடற்படையினரை அனுப்பினர். அதனால் இன்று பெருமளவான கடற்படையினர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நகரசபை, பிரதேசசபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அனுபவம் கூட இல்லாத கோட்டாபயவுக்கு எவ்வாறு இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்ற தெளிவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் கடந்த கால ஆட்சியில் இராணுவத்தினருடன் சிவில் பொறுப்புக்களை கையளித்தமையால் ஏற்பட்ட விபரீதங்களை அனைவரும் நன்கறிவீர்கள்.

தமது அடிப்படை உரிமையான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக ரத்துபஸ்வல பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு நடந்த விளைவு தொடர்பில் அனைவருக்கும் நினைவிருக்கும். கோட்டாபயவின் செயற்பாடுகள் தொடர்பில் நம்மைவிட பிரதமர் மகிந்த தெளிவு கொண்டிருக்கிறார்.

அதனால், இந்த இராணுவ ஆட்சியால் எங்களுக்கு பாதிப்பில்லை, ஐக்கிய மக்கள் சக்திக்கே பாதிப்பு ஏற்படும் என்ற எண்ணத்தில், மூடத்தனமான குதூகலத்தில் இருக்காதீர்கள், இராணுவத்தினர் நாளை உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி, வீட்டிலுள்ளவர்களை இழுத்துச் செல்வதற்கான வாய்ப்பும் இருக்கின்றது என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

காலகாலமாக அரசாங்கத்தின் முக்கிய பதவிகளை வகித்த அரச நிர்வாகத்துறையின் மீது நம்பிக்கை கொண்டிராத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவருடைய சகாக்களான ஓய்வு பெற்ற இராணுவத்தினர் மீது கொண்டுள்ளார்.

இதன் காரணமாகவே நிர்வாகத்துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வந்த பொறுப்புகளை தற்போது இராணுவத்திரைக் கொண்டு நிறைவேற்றி வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மே மாதக்கொடுப்பனவுகளுக்காக 2572 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் பந்துல தகவல்



(கொழும்பு)

கொரோனாத் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான மே மாதக் கொடுப்பனவுகளுக்கு 2572 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்டபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறுதெரிவித்தார். (ஜ-8)

## குடிநீர்க் குழாய்கள் விசமிகளால் உடைப்பு

(கரணவாய்)

கரணவாய் செல்வபுரம் கிராமத்தில் வசிக்கும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பெறும் இரண்டு குடிநீர்க் குழாய்கள் நேற்று முன்தினம் விசமிகளால் அடித்துடைக்கப்பட்டன.

இது தொடர்பாக குடிநீர் வழங்கலுக்குப் பொறுப்பானவரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.



பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸார் மூலம் நிலைமையை அறிந்து கொண்டபின் உடனடியாக குடிநீர்க் குழாய்களை மீளப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். (இ-5-60)

# தமிழினப்படுகொலை நினைவேந்தலை இல்லங்களிலிருந்து ஆரம்பிப்போம்

## தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழினப் படுகொலையின் 11 ஆவது ஆண்டு நினைவு நாளை தமிழ்த் தேசம் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கவுள்ளது. ஆழமாகி வரும் இராணுவ மயமாக்கல், அச்சுறுத்தும் கொரோனாவுக்கு மத்தியில் நாம் இம்முறை இந்த நினைவு நாளை அணுக வேண்டியுள்ளது.

பொறுப்புக்கூறல் போராட்டம் இந்த தலைமுறையோடு முடிவடையாது என்பதும் தலைமுறை கடந்ததாக அமையும் என்பதும் எமக்கு கடந்த வருடம் உணர்த்திய ப்பாடங்கள். நீண்ட தலைமுறை கடந்த நீதிக்கான போராட்டத்திற்கான நிறுவனம் சார் ஏற்பாடுகளையும் கட்டமைப்புசார் செயற்பாடுகளையும் நாம் உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் போராட்டத்திற்குத் தேவையான கூட்டு உள வலிமையையும் ஓர்மத்தையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் எனத் தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தியது.

**முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின் பிறந்த ஓர் தலைமுறை எமது தாயகத்தில் வளர்ந்து வருகின்றது. அந்தத் தலைமுறைக்கு எமது தேசத்தின் வரலாற்றையும் போராட்டத்தின் வரலாற்றையும் நாம் அனுபவித்த, அனுபவிக்கும் ஒடுக்குமுறையையும் பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.**

அந்த ஒடுக்குமுறையோடு வாழப் பழகாதிருக்க, அவ்வொடுக்குமுறையிலிருந்து அவர்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிவகைகளை நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவ்வாறான தற்காப்புப் பொறிமுறைகளில் ஒன்று நினைவேந்தல்களை முறையாக ஒழுங்கமைத்துக் கொள்வது.

அந்தவகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவால் ஏலவே கோரப்பட்டவாறு இந்த முறை நாம் நினைவேந்தலை எமது இல்லங்களிலிருந்து ஆரம்பிப்போம்.

பின்வரும் மூன்று செயற்பாடுகளில் தாயகத்திலும் புலத்திலுமுள்ள அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என அன்புரிமையுடன் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் குழுவோடு இணைந்து கேட்டுக் கொள்கின்றோம்:

1.மே-18 அன்று இரவு 7 மணிக்கு வீடுகளில் தீபங்கள் ஏற்றி முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நினைவுகூரல்.

2.மே-18 அன்று எமது மக்கள் போரின் இறுதி நாட்களில் உட்கொண்ட கஞ்சியை அன்றையதினம் ஒருவேளையேனும் உணவாகாராமாக்கிக் கொள்ளல்.

3.மே-18 அன்று இரவு 7 மணிக்கு அனைத்து வணக்கத் தலங்களிலும் விசேட மணி ஒலி எழுப்பி பேரவலத்தை நினைவு கூரல்.

இத்தகைய செயற்பாடுகள் நினைவேந்தலை சமூகமயப்படுத்த உதவும் என நாம் நம்புகின்றோம். எமக்குள் என்றும் நீங்கா அந்த நினைவு விளக்கை தூண்டிவிட அனைவரும் கரம் கோர்ப்போம் என அந்த அமையத்தினர் மேலும் வலியுறுத்தினர். (இ-7)

## கொரோனாத் தொற்றைக் கண்டறிய

# இலங்கையில் இதுவரை 39,629 பி.சி.ஆர்.பரிசோதனை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிய நேற்று முன்தினம் மாத்திரம் 1078 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அதேவேளை, நேற்று முன்தினம் மாத்திரம் 20 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அதன்படி இலங்கையில் இதுவரை நடத்தப்பட்ட மொத்த பி.சி. ஆர். சோதனைகளின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 629 ஆக அதிகரித்தது.

ஏப்ரல் 27 ஆம் திகதி அதிக எண்ணிக்கையிலான பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டன, 1,869 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 466 பேர் கைது;245 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்காக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 466 பேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 245 வாகனங்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே மார்ச் 20 ஆம் திகதி முதல் ஊரடங்கு உத்தரவுகளை மீறியமைக்காக நாடு முழுவதும் 53 ஆயிரத்து 547 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் காலகட்டத்தில் 14 ஆயிரத்து 333 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-8)

# ஜனாதிபதி செயலகத்தால் விசேட நிதியம் ஆரம்பம்

(கொழும்பு)

சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக ஜனாதிபதி செயலகம் "இட்டுகம" என்ற விசேட நிதியத்தை ஆரம்பித்தது.

ஜனாதிபதி தலைமையில் இந்த நிதியம் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நிதியத்திற்கு நன்கொடைகளை **#207#** என்ற இலக்கத்திற்கு அழைப்பு விடுத்தோ அல்லது **www.itukama.lk** என்று இணையத்தள முகவரியைப்



பயன்படுத்தியோ வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# காலம் நீடிப்பு

(கொழும்பு)

மேல் மாகாண தனியார் பேருந்துகளுக்கான வீதி அனுமதிப் பத்திரத்திற்கான காலம் நீடிக்கப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் 31 ஆம் திகதி வரை குறித்த காலம் நீடிக்கப்பட்டதோடு, அதற்காக எந்தவொரு வரியும் அறவிடப்படாது எனவும் மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபை தெரிவித்தது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இ-7)

# இராசிபலன்

15.05.2020
வைகாசி 02, வெள்ளிக்கிழமை
அட்டமி பிற்பகல் 12.04 மணிவரை
அவிட்டம் முற்பகல் 11.06 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
சந்திராஷ்டமம்:- புனர்பூசம், பூசம்

வளவன்



**மேஷம்**: வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலை உயரும் நாள்.



**ரிஷபம்**: சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



**மிதுனம்**: இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.



**கடகம்**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வேலைச்சுமை கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**சிம்மம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**கன்னி**: முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.



**துலாம்**: வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.



**விருச்சிகம்**: நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.



**தனுசு**: அச்சுறுத்தலாக இருந்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விரோதம் விலகும்.



**மகரம்**: அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.



**கும்பம்**: இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**மீனம்**: தொழிலில் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

இளமையில் கல், நேர்மையைக் கல்

# கொழும்பு,கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்த சிலர் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதில்லை



## அஜித் ரோஹண அதிருப்தி

(கொழும்பு)

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை சாதாரண நிலைமைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்த சிலர் சுகாதார அறிவுறுத்தல்களைச் சரிவரப் பின்பற்றுவதில்லை என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அதிருப்தி வெளியிட்டார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த எதிர்வரும் நாட்களில் பல புதிய சட்டங்கள் அடங்கிய சுற்றுநிருபத்தை வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

# கொவிட்-19 சுகாதார, பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ரூ.915 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தினர் 5 மில்லியன் ரூபாவையும் ரங்கிரி தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்கத்தினர் 5 மில்லியன் ரூபாவையும் நிதியத்திற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன மற்றும் ஜனக பண்டார தென்னகோன் ஆகியோரும் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.

மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம்.ஏ.மானெல் பண்டார ஐம்பதாயிரம் ரூபாவையும், கம்பஹா பிரதேச சபை உறுப்பினர் மானெல் கருணாவங்ச 16500 ரூபாவையும், சரத் கருணாரத்ன ஐந்து இலட்சம் ரூபாவையும், NEC Lanka Industries நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும், உதார கிங்தொட மற்றும் மகேஷ் டயஸ் ஆகியோர் ஒரு இலட்சம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தனர்.நிறுவன, தனிப்பட்ட அன்பளிப்புக்கள் மற்றும் நேரடி வைப்புக்களுடன் கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 915 மில்லியனாக அதிகரித்தது.

இதேவேளை ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் சுகீஸ்வர பண்டாரவின் கோரிக்கையின் பேரில் ரஞ்சன் டி சில்வா மற்றும் தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளர் ரொஷான் வெல்லப்புளி ஆகியோர்களால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியசாலை நடவடிக்கைகளுக்காக 03 கைத்தொலைபேசிகள் அதன் பிரதிப் பணிப்பாளர் சந்தன கஜநாயக்கவிடம் கையளிக்கப்பட்டன. (இ-7-8)


## மணமகள் தேவை

பிறப்பு:- 1987.06.21 இந்து கௌரவ குடும்பம்
நட்சத்திரம்:- அச்சுவினி, கிரகபாவம்:- 19, 9 இல் சூரி, செவ்
உயரம்:- 5′ 9″ (170 cm).
தகைமை:- கணக்காய்வாளர் (அரசு) B.com, HNDA
எதிர்பார்ப்பு:- அரச உத்தி, பட்டதாரி (2829)
தொடர்பு:- 077 305 1927, 021 226 2354


# மின்சார கட்டணப் பட்டியல்களை தனித்தனியாக வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மின்சாரக் கட்டணப் பட்டியல்களை தனித்தனியாக வழங்குமாறு மின்சாரம் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மின்சார சபை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இரண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணங்களை ஒரே பட்டியலில் வழங்குவதால் மின்கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படும் எனச் சுட்டிக்காட்டியதை அடுத்தே அமைச்சர் இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை மின்சார சபை அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னரே இரண்டு மாதங்களுக்கான மின்சார கட்டணப் பட்டியலை தனித்தனியாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரையில் இரண்டு மாதங்களுக்காக வழங்கப்பட்ட மின்கட்டணப் பட்டியலை செலுத்துவதற்கும் மின்சாரக் கட்டணத்தை வழங்க ஒரு மாதகாலம் அவகாசம் வழங்குவதென்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (இ-7-8)

# பணப்புழக்க அளவை வலுப்படுத்த மத்திய வங்கியின் ஒழுங்குமுறைகள்

(கொழும்பு)

கொவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக வங்கிகளின் பணப்புழக்க அளவை வலுப்படுத்த பல ஒழுங்குமுறைகளை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

மத்திய வங்கியின் நாணய சபை இந்த ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்தியது. அதன்படி, அங்கீகாரம் பெற்ற வங்கிகளின் விருப்பப்படி கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த நாணய சபை தீர்மானித்தது.

அங்கீகாரம் பெற்ற வங்கிகளின் பண வழங்கல் செயற்பாடுகளை அறிவிக்க, இலாபங்களை முதலீடு செய்ய, அதன் பங்குகளை மீண்டும் கொள்வனவு செய்ய, நிர்வாகக் கொடுப்பனவுகளை உயர்த்த அல்லது டிசெம்பர் 31 ஆம் திகதி வரை வங்கிகளின் பணிப்பாளர் குழுவிற்குக் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு நாணய சபை அறிவித்துள்ளது.

மேலும் அங்கீகாரம் பெற்ற வங்கிகளின் அத்தியாவசிய மற்றும் மூலதன செலவுகளை இயலுமான வரை எச்சரிக்கையுடன் செயற்படுத்துமாறும் மத்திய வங்கி தெரிவித்தது.

தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டிற்கான வங்கிகளின் வருடாந்த பண மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டாம் எனவும் நாணயசபை ஆலோசனை வழங்கியது. (இ-7)


# சேவை நலன் பாராட்டு



## திருமதி. பகவதி ஸ்ரீஸ்கந்தன்

(இலங்கை ஆசிரியர் சேவை தரம் –1, விசேட பயிற்சி ஆங்கிலம்)

16.04.1984-14.05.2020 வரை


சேவை விபரம்

| | |
|---|---|
| 1. மன்/தேவன்பிட்டி அ.த.க.பாடசாலை | 16.04.1984 - 31.12.1989 |
| 2. மன்/இலுப்பைக்கடவை அ.த.க.வித்தியாலயம் | 01.01.1990 - 15.01.1990 |
| 3. பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | 16.01.1990 - 31.12.1991 |
| 4. மன்/இலுப்பைக் கடவை அ.த.க.வித்தியாலயம் | 01.01.1992 - 31.12.1992 |
| 5. யா/ அருணோதயக் கல்லூரி, அளவெட்டி | 01.01.1993 - 31.12.2006 |
| 6. யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி | 01.01.2007 - 01.04.2015 |
| 7. யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை | 02.04.2015 - 14.05.2020 |

கனிவான பேச்சு கண்ணியம் மிக்க செயல் ஆசிரியர்க்கே உரித்தான அம்சமான தோற்றம்
எங்கள் ஆங்கிலமொழி ஆசான் அகவை அறுவதில் ஆசிரிய பணியை
நிறைவு செய்யும் தாங்கள் ஆயுள் ஆரோக்கியத்துடன்
வளம் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்


வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

(2837)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினம் சர்வதேச தாதியர் தின நிகழ்வு இடம்பெற்றது.

# மே பதினெட்டில் ஒவ்வொருவரும் ஒரு பயன்தரு மரம் நாட்டுங்கள் தமிழர் தாயகத்தை வளப்படுத்துங்கள்



## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**பயன்தரு மரங்கள் எமது மரணித்த உறவுகளின் உடலின் உரத்தையும் தம்வசம் ஈர்த்தெடுக்கப் போகின்றன. ஆகவே மே பதினெட்டில் ஒவ்வொருவரும் ஒரு பயன்தரு மரம் நாட்டுங்கள். தமிழர் தாயகத்தை வளப்படுத்துங்கள் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

**கேள்வி:** உங்கள் பயன்தரு மரநடுகை செயற்றிட்டம் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:** முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு வாரமானது ஆண்டுதோறும் மேமாதம் 18 ஆம் திகதியையொட்டிய காலமாகும். அது அரசாங்க படைகளின் அட்டூழியத்தால் அகால மரணமடைந்த எமது மக்களின் நினைவாக நாம் செலுத்தும் எமது அஞ்சலி நிகழ்வுகளின் வாரமாகும்.

இறந்தவர்களுக்கும் பயன்தரு மர நடுகைக்கும் என்ன தொடர்பு என்று கேட்பீர்கள். தொடர்பு இருக்கின்றது. இனப்படுகொலையின் போது எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் உடல்கள் புதைக்கப்பட்டு அவை மண்ணோடு மண்ணாகி விட்டன.

எரிக்கப்பட்டவர்களின் சாம்பல் மண்ணுக்கு உரமாகி விட்டது. மண்ணோடு மண்ணாகக் கலந்த அந்த உடல்களின் எஞ்சியவை வீணாகப் போய் விடக் கூடாது. மீண்டும் அவை உயிர்த்தெழ வேண்டும். எம் மக்களின் வைராக்கியத்தை வலுவேற்ற வேண்டும். அவர்கள் மரணம் வெறும் மரணமாக ஆகிவிடக் கூடாது.

எமது வருங்காலத்தை மாற்றி அமைக்கும் வலுவான ஊட்டமாக அவர்களின் உடற் துகள்கள் மாறவேண்டும். அவர்களால் மெருகூட்டப்பட்ட உரம் எமக்கு ஊட்டமாகவும் உற்சாகம் கொடுக்கும் உணவாகவும் மாற வேண்டும். அவர்களின் உடல்கள் எங்கே புதைக்கப்பட்டன, எரிக்கப்பட்டன என்பது முக்கியமல்ல.

இந்த வட கிழக்கில் எமது தாயகத்தில் எங்கோ ஒரு இடத்தில் தான் நிலத்துடன் கலந்துள்ளனர். இந்த நிலத்தில் விருத்தியாகப் போகும் பயன்தரு மரங்கள் எமது மரணித்த உறவுகளின் உடலின் உரத்தையும் தம்வசம் ஈர்த்தெடுக்கப் போகின்றன.

ஆகவே மே பதினெட்டில் ஒவ்வொருவரும் ஒரு பயன்தரு மரம் நாட்டுங்கள். தமிழர் தாயகத்தை வளப்படுத்துங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உங்கள் ஒவ்வொருவரின் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் பயன்தரு மரங்களை காலையில் நாட்டுங்கள். மரக்கன்றுகளை எம்மவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் விபரம் பின்வருமாறு.

1. யாழ்ப்பாணம் கந்தையா இராஜதுரை - 071 858 4882.
2. வவுனியா விநாயகமூர்த்தி குகசேசன் - 077 502 4784.
3. மன்னார் ஆறுமுகம் செல்வேந்திரன் - 077 434 9363.
4. முல்லைத்தீவு நடனசபாபதி வன்னியராஜா -077 502 7674.
5. கிளிநொச்சி கந்தசாமி பரிமளராஜ்(பாமகன்)-077655 0030.
6. திருகோணமலை சிவசுப்பிரமணியம் நந்தகுமார் (நந்தன் மாஸ்டர்) - 075 311 3541.
7. மட்டக்களப்பு எம்.உதயராஜ்- 077 908 0697, 071 310 9938.

எமது கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் இந்த மரம் நாட்டும் பணியில் அன்றையதினம் ஈடுபடுவார்கள். கொரோனா வைரஸ் சம்பந்தமாக தரப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை மனதிற்கொண்டு அவற்றிற்கு அமைவாக பயன்தரு மரம் நாட்டல் செயற்பாட்டை முன் நடத்துங்கள்.

அதுமட்டுமன்றி எமது மக்கள் யாவரும் வரும் மே 18-18-18ன் போது நீங்கள் இருக்கும் இடங்களில் 2009 மேமாதம் இதே தினத்தன்று முள்ளிவாய்க்காலில் மரணித்தோர் நினைவாக விளக்குகள் ஏற்றி வழிபாடுகள் செய்ய வேண்டுகின்றோம்.

18-18-18 என்றால் மே 18ஆம் திகதி மாலை 6 மணி 18 நிமிடங்கள். அந்த நேரம் வரும் போது விளக்கேற்றுங்கள். இதனை எமது புலம்பெயர்ந்த உறவுகளும் தாம் வாழும் நாடுகளில் அவர்கள் நேரத்திற்கேற்ப நடைமுறைப்படுத்துகின்றார்கள்.

ஒட்டுமொத்த தமிழினமே உலகளாவிய ரீதியில் இதைச் செய்வதால் நாம் இரண்டு விடயங்களை நிலை நிறுத்தப் போகின்றோம். ஒன்று மரணித்தோர் அனைவரும் எமது உறவுகள்.

அவர்களை அன்றைய தினம் நாம் நினைவில் இருத்துகின்றோம் என்பது. இரண்டு அன்று நடந்தது எமக்கெதிரான இனப்படுகொலையின் ஒரு அம்சம். அரசாங்கப் படைகள் அன்று செய்த கொடூரமான மனிதாபிமானமற்ற செயலை இன்றும் நாம் கண்டிக்கின்றோம் என்பது.

இந்த மனோ நிலையுடன் அன்று எமது மக்கள் யாவரும் மாலையில் விளக்கேற்ற வேண்டும் என்று பணிவன்புடன் நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுச்சந்தையை மீளத்திறந்து வியாபார நடவடிக்கைகளை வழமைக்குத் திருப்ப வேண்டும்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொதுச்சந்தையை மீளத் திறந்து வியாபார நடவடிக்கைகளை வழமைக்கு திருப்ப வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இக்கோரிக்கையை முன்வைத்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வீதியோர வியாபார நடவடிக்கைகளை விட சுகாதாரப் பிரிவின் ஆலோசனையைக் கேட்டு மீள சந்தையைத் திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது பாதுகாப்பானது.

வீதியோர வியாபாரத்தில் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க முடியாது. ஆனால் கொடிகாமம் பொதுச் சந்தைக்குள் சுகாதாரத்தையும், சமூக இடைவெளியையும் பேணும் அளவிற்கு போதிய இடவசதி உள்ளது.

தற்போது தற்காலிக வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் மழை மற்றும் வெயில் என வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே மீளவும் பொதுச் சந்தையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

**உறுப்பினர்களின் கோரிக்கைக்குத் தவிசாளர்,**

கொடிகாமம் பொதுச் சந்தையை மீளத் திறப்பது தொடர்பான முன்மொழிவுப் பத்திரத்தை உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம். தற்போது கொரோனா வைரஸ்தொற்று அச்சம் காரணமாக நாட்டில் உள்ள அனைத்துச் சந்தைகளும் மூடப்பட்டிருப்பதால் உரிய அனுமதி கிடைக்காமல் சந்தையை மீளத் திறக்க முடியாது எனப் பதிலளித்திருந்தார். (இ-30)

# போட்டி முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மாணவர்களுக்காகப் புத்தூர் பொது நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்.

**சித்திரப்போட்டி**

**தரம் : 1-2**

ஜ.திகல்கா-1ஆம் இடம் தரம் 2 (யா/அருணோதயாக்கல்லூரி), உ.ஆராதனா- 2ஆம் இடம் தரம் 2 (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), ப.சிவனியா- 3ஆம் இடம் தரம் 1 (யா/சென்பொஸ்கோ வித்தியாலயம்), ஜி.சுலக்சன்- 3ஆம் இடம் தரம் 2 (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி).

**தரம் : 3-4**

நா.சஞ்சனா- 1ஆம் இடம் தரம் 4 (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), ப.கருணியா- 2ஆம் இடம் தரம் 4 (யா/சென்பொஸ்கோ வித்தியாலயம்), எஸ்.அட்சயா- 3ஆம் இடம் தரம் 3 (யா/கொக்குவில் இந்த ஆரம்பப் பாடசாலை), என்.கேசிகன்-3ஆம் இடம் தரம் 4 (யா/சென் பொஸ்கோ வித்தியாலயம்).

**தரம் 5-6**

த.அக்சிகா- 1ஆம் இடம் தரம் 6 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), லோ.லபீசன்-2ஆம் இடம் தரம் 6 (யா/உசன் இராமநாதன் வித்தியாலயம்), ச.கதீசன்-3ஆம் இடம் தரம் 6 (யா/இந்துக் கல்லூரி), என்.தர்சீபன்- 3 ஆம் இடம் தரம் 5 (யா/ சென் பொஸ்கோ வித்தியாலயம்).

**தரம் 7-8**

கு.திருமகள்-1ஆம் இடம் தரம் 7 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஆர்.மதுராங்கி- 2ஆம் இடம் தரம் 7 (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆர்.மதுராந்தன்-3 ஆம் இடம் தரம் 7 (யா/சாகவச்சேரி இந்துக்கல்லூரி), ரி.அட்சயன்-3ஆம் இடம் தரம் 7 (யா/இந்துக்கல்லூரி).

**தரம் 9-10**

பி.மதுராந்தி-1ஆம் இடம் தரம்9 (யா/கொக்குவிலில் இந்துக் கல்லூரி), ச.அபிராம்-2ஆம் இடம் தரம்10 (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), ந. நிந்துசன்-3ஆம் இடம் தரம் 10 (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தரம் 11-13**

கி.சுகேதா- 1ஆம் இடம் தரம் 13 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இ.ஆர்.றின்தியா-2ஆம் இடம் தரம் 12 (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ச.இளங்குமார்- 3ஆம் இடம் தரம் 13 (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), செ.சபீனா- 3ஆம் இடம் தரம் 13(யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை).

**சஞ்சிகை ஆக்கம்**

ச.கதீசன்-1ஆம் இடம் தரம் 6 (யா/இந்துக்கல்லூரி), நி.கவிநயா- 2ஆம் இடம் தரம் 6 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), உ.அபிலாஸ்-3 ஆம் இடம் தரம் 7(யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி).

**கவிதைப் போட்டி**

**தரம் 6-7**

அ.ரூபிகா-1ஆம் இடம் தரம் 6 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ச.கதீசன்-2ஆம் இடம் தரம் 6 (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஆ.பர்மிகா-3 ஆம் இடம் தரம் 7 (யா/இந்து மகளிர் கல்லூரி).

**தரம் 8-9**

பா.தமிழ்க்கனி-1ஆம் இடம் தரம் 9 (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வி.யசோதன்- 2ஆம் இடம் தரம் 8 (யா/இந்துக் கல்லூரி), ச.சகீரன்-3 ஆம் இடம் தரம் 8 (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் 10-11**

த.நிஷாந்தினி-1ஆம் இடம் தரம் 11 (யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்), ஜ.தனுசங்கரன்-2 ஆம் இடம் தரம் 11 (யா/இந்துக்கல்லூரி), அ.மதுரா- 3 ஆம் இடம் தரம் 11 (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), த.நிந்துஜன்-3ஆம் இடம் தரம் 10 (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தரம் 12-13**

கு.ஜனார்தனி-1ஆம் இடம் தரம் 13 (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ச.குபேரன்-2 ஆம் இடம் தரம் 13 (யா/உடுத்துறை மகா வித்தியாலயம்), ச.பிறின்சியா- 3 ஆம் இடம் தரம் 13 (யா/தெல்லிப்பழையூனியன்கல்லூரி), க.கம்சிகா- 3ஆம் இடம் தரம் 12 (யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை).

**கட்டுரைப்போட்டி**

**தரம் 4-5**

நா.சஞ்சனா-1ஆம் இடம் தரம் 4 (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), ச.சந்தோஸ்-2ஆம் இடம் தரம் 5 (யா/கோண்டாவில் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை), சு.கீர்த்தி 3ஆம் இடம் தரம் 5 (யா/கோண்டாவில் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை).

**தரம் 6-7**

ச.பிரதீப்-1ஆம் இடம் தரம் 7 (கோண்டாவில் இந்துக்கல்லூரி), ச.கதீசன்-2ஆம் இடம் தரம் 6 (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), ஜெ.லக்சயன்-3ஆம் இடம் தரம் 6 (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), கு.திருமகள்-3 ஆம் இடம் தரம் 7 (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை).

**தரம் 8-9**

ஜெ.பாவனா-1ஆம் இடம் தரம் 8 (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ச.மிகானா-2 ஆம் இடம் தரம் 8 (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பா.தமிழ்க்கனி- 3ஆம் இடம் தரம் 9 (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**தரம் 10-11**

ப.தயாநிதி-1ஆம் இடம் தரம் 10 (வட இந்து மகளிர் கல்லூரி), பா.வானுஜன்-2ஆம் இடம் தரம் 10 (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), க.கிசோலினி- 3 ஆம் இடம் தரம் 10 (யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), ர.நிஷா ந்தினி- 3ஆம் இடம் தரம் 11 (வேலணை மேற்கு நடராஜ வித் தியாலயம்), நி.நிந்துசன்-3 ஆம் இடம் தரம் 10 (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தரம் 12-13**

கு.ஜனார்தனி-1ஆம் இடம் தரம் 13 (கொக்குவில் இந்துக் கல்லூரி), ச.சஜீனா-2ஆம் இடம் தரம் 12 (யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி), இ.போமிகா-3 ஆம் இடம் தரம் 12 (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### 108 வெளிநாட்டுப் பிரஜைகள்

# மாலைதீவிலிருந்து இலங்கை வருகை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக மாலைதீவில் சிக்கித் தவித்த 108 வெளிநாட்டுப் பிரஜைகள் நேற்று முன்தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாட்டை வந்தடைந்த அனைத்து பயணிகளும் விமான நிலையத்தில் வைத்து கிருமி நீக்கும் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் குறித்த விமானத்தில் வருகை தந்த 45 பாகிஸ்தான் பிரஜைகள் லாகூர் நோக்கிப் புறப்பட்டனர்.

மிகுதி 63 பயணிகளும் இலங்கையில் ஏற்கனவே சிக்கித் தவித்த வெளிநாட்டினர் மற்றும் ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லத் தகுதியுடைய 99 பேர் அடங்கலாக மொத்தம் 162 பயணிகளுடன் விமானமொற்று நேற்று முன்தினம் இரவு 11.45 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு புறப்பட்டது. (இ-7-8)


## கேள்வி அறிவித்தல்
## சபை நிதிவேலைத்திட்டம் - 2020
## உள்ளூராட்சி திணைக்களம்
## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதியில் ஒருபகுதி கீழ்வரும் வேலைத்திட்டங்களின் கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தவிசாளர், பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான **(CIDA)** பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். உரிய **CIDA** தரத்தில் எவரும் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே அதனிலும் கூடிய **CIDA** தரத்தினை உடைய கேள்விதாரரின் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule 5)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி:- 021 228 5761, தொலைநகல்:- 021 228 5690, **E-Mail:** kilinochchilkps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை 29.05.2020 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 15.05.2020 ஆம் திகதியிலிருந்து 29.05.2020 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000/-** (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A-9 வீதி கிளிநொச்சி எனும் முகவரிக்கு 29.05.2020 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கால அடிப்படையில் செல்லுபடியாகும்.
தலைமை அலுவலகக் கிளைக் கட்டடம் அமைத்தல் - செல்லுபடியாகும் காலம் 77 நாட்கள் (14.08.2020 வரை)
வாகனச் சுத்திகரிப்பு நிலையக் கட்டடம் அமைத்தல் - செல்லுபடியாகும் காலம் 63 நாட்கள் (31.07.2020 வரை)

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KI/KAPS/COU/01/2020 | கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகக் கிளைக் கட்டடம் அமைத்தல் | 6.32Mn | 60 நாட்கள் | C7 அல்லது அதற்கு மேல் | 64000 | 11.09.2020 |
| NP/KI/KAPS/COU/02/2020 | வாகன சுத்திகரிப்பு நிலைய கட்டடம் அமைத்தல் | 4.43 Mn | 60 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல | 45000 | 28.08.2020 |

கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 22.05.2020 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.
(¢-9585)


# ‘புடைவைக் கடைகளுக்கு பெண்கள் செல்ல வேண்டாம்’

(சம்மாந்துறை)

ரம்ழான் பெருநாளுக்கான புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதற்காக புடைவைக் கடைகளுக்குப் பெண்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை, அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் என்பன கூட்டாக வேண்டுகோள் விடுத்தன.

நேற்று வெளியிட்ட அறிக்கையில், "ஊரடங்குச் சட்டம் தற்போது பகல் வேளையில் முழுமையாகத் தளர்த்தப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், மக்களிடையேயான சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை சுகாதாரத துறை வலியுறுத்தி வருகின்றது.

இக்கட்டுப்பாடுகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனையுடனேயே, அரசாங்கம் ஊரடங்கு சட்டத்தைத் தளர்த்தியது.

"இந்நிலையில், முஸ்லிம்கள் தற்போது ரம்ழான் நோன்பை அனுஷ்டித்து வருவதுடன், சில நாட்களில் வரவுள்ள பெருநாளை கொண்டாடுவதற்கான தயார்படுத்தல்களிலும் எமது மக்கள் ஈடுபடுகின்றனர்.

"இத்தருணத்தில் நாம் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில், புத்தாடை கொள்வனவுக்காக பெண்கள் கடைத் தெருக்களுக்கும் புடைவைக் கடைகளுக்கும் செல்வதை முற்றாகத் தவிர்த்து, ஒவ்வொரு குடும்பத்தின் சார்பிலும் ஆண்கள் மாத்திரம் சுகாதார முறைமைகளை கடைபபிடித்தவாறு, உரிய இடங்களுக்குச் சென்று குறுகிய நேரத்தினுள் தேவை யான ஆடைகளையும் பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டு, வீடுகளுக்குத் திரும்புங்கள்" என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

# ஆடையகத்தில் குவிந்த பெண்கள்

(கொழும்பு)

கிண்ணியாவில், நோன்புப் பொருநாளுக்கான ஆடைகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு, ஆடை விற்பனை நிலையங்களில் பெருமளவில் முஸ்லிம் பெண்கள் குவிந்தனர்.

எனினும் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய விற்பனை நிலையங்களிலும் முகக் கவசங்கள் அணிந்து, கைகளைச் சவர்க்காரம் இட்டுக் கழுவிய பின்னர் சுமார் 10 பேர் மாத்திரமே விற்பனை நிலையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். (இ-7)


## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5’7”
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த Bank incharge officer (private)
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10734

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: - செவ் 8 இல்
தகைமை/தொழில்:Advanced Diploma in Quantity Surveying கணிய அளவையியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த தொழில்புரியும் பெண்
தொ.இ: B/10735

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி 4 செவ் 12 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த வெளிநாட்டில் பாடகராக உள்ளார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் தொ.இ: B/10736

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: - செவ் 9 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: சாரதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10737

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 24¼ செவ் 9 இல் உயரம்: 160 cm
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்
தொ.இ: G/10773

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 63 செவ் 7 இல் உயரம்: 5’3”
தகைமை/தொழில்:HNDA,கிராமிய வங்கி
எதிர்பார்ப்பு: உள்நாடு, தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10776

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3 கி.பா: 13 செவ் 1 இல்
தகைமை/தொழில்: GAQ, Library Assistant
எதிர்பார்ப்பு: நிரந்தரத்தொழில் அல்லது வெளிநாடு. மணமகள் விவாகரத்தானவர். எனவே பிள்ளைகள் இல்லாத விவாகரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: G/10778

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 48¾சூரி, செவ் 2இல் உயரம்:148 cm
தகைமை/தொழில்: லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி டிப்ளோமாதாரி
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: G/10779

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மீண்டு எழுவோமா இல்லையேல் பட்டினிச்சாவிற்குள் தள்ளப்படுவோமா?

## என்பது பற்றிய ஒரு நோக்கு



பேராசிரியர் வி.பி. சிவநாதன்

உலகப்பொருளாதாரம் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு மந்த நிலைக்குச் சென்றுவிட்டது. இரண்டாம் உலகப்போர்க் காலத்திலும் உலகப் பொருளாதாரம் மந்த நிலையடைந்தது. அதற்கு வர்த்தகப் போட்டிகளும் நெருக்கடிகளும் பொருட்சந்தைத் தோல்விகளும் பங்குச்சந்தைத் தோல்விகளும் போர் நெருக்கடிகளும் உலகப் பொருளாதாரத்தில் மந்தநிலையை தோற்றுவித்தது. அதற்குப்பின்னால் அரசியல் பொருளாதாரக் காரணிகள் இருந்தன. ஆனால் இன்றைய பொருளாதார மந்தத்திற்கு கொரோனாவிற்கு அஞ்சி நாம் எடுத்த முடிவுகள்தான் காரணமாகின்றது. இதனால் உலகின் 26 கோடி மக்கள் பஞ்சம் பட்டினிக்குள் தள்ளப்படுவர் என ஐக்கிய நாடுகள் சபை கணக்கிட்டுள்ளது.

கொரோனாவால் உலகின் எல்லா நாடுகளிலும் முடக்கல், மூடுதல் மெய்யாக நடந்து விட்டது. உயிர்பிழைப்பதே முதல்தேவையாக இருப்பதால் அரசாங்கங்களும் மக்களும் இணைந்து மனித இடைவெளிகளையும் சமூக இடைவெளிகளையும் நிறுவன இடைவெளிகளையும் நகர, கிராம, தேச இடைவெளிகளையும் தாமாகவே முன்வந்து ஏற்படுத்தியுள்ளனர். இது உலகின் எல்லாத் துறைகளினதும் செயற்பாட்டையும் பாதித்துள்ளது. இது உலகில் பொருளாதார மந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சாதாரண பொருளாதார மந்தமில்லை. ஏனெனில் நாமே தீர்மானித்து முடக்கினோம். நாமே பொருளாதார மந்த நிலையை ஏற்படுத்தினோம். எனவே மூடியதை எப்போது நாம் திறக்கப்போகிறோம் எப்போது மந்தநிலையிலிருந்து விடுபடப்போகிறோம். இது 2008 இல் உலகில் ஏற்பட்டது போல நிதி அதிர்வல்ல. இது ஒழுங்காக உருவாகிய பொருளாதார மந்தமும் அல்ல. இது உண்மையில் இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட ஒன்று. இதன் உலகளாவிய தாக்கம் சுகாதார அதிர்வாகும்.(Covid-19 is a health shock)

கடந்த 100 வருடங்களில் எதிர்கொண்ட அதிர்வுகளில் இதுவே மிகப்பெரிய அதிர்வு. இது சமூக, பொருளாதார, அரசியல், சமய, கலாசாரத்தில், தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமல்லாது இவை எல்லாவற்றிலும் புதிய பரிமாணங்களைத் தரிசிக்க வைத்துள்ளது. மனித சமூகத்தை பாதுகாப்பது முதற்கடமை. இதற்கு பின்னர் ஏனைய பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன.

மக்களின் சுகவாழ்வுக்கு தொடர்ச்சியான உணவு கிடைப்பு நிலையை உறுதிப்படுத்துவது என்பது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அடிப்படையானது. உணவை தங்கு தடையின்றி பெறுவதற்கு மக்கள் வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கான பொருளாதார சூழலை ஏற்படுத்துவது அரசின் முதற்கடமையாக உள்ளது.

இன்று பொருளாதாரம் வீழ்வதற்குப் பின்னணியாக இருப்பது குறிப்பிட்ட பொருளாதாரக் கொள்கையால் ஏற்பட்ட வர்த்தகப் பிழைகளோ அல்லது சந்தைத்தோல்விகளோ அல்ல. இது நாமாக ஏற்படுத்திக்கொண்டது. கொரோனாவின் தாக்கத்திலிருந்து முதலில் விடுதலை பெற வேண்டும். நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்காக தேசிய ரீதியில் ஏற்படுத்திக் கொண்ட முடக்கல்களின் விளைவு, நம்மில் யாரும் வேலைக்கு செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் பொருளாதார செயற்பாடு நின்றுவிட்டது என்பது உண்மை. இது சாதாரண அதிர்வல்ல. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியை விரைவாக வீழ்ச்சியடையவைத்தது. ஐரோப்பிய நாடுகளில் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் ஜேர்மனியில் 4.2 வீதத்தாலும் பிரான்ஸில் 8.0வீதத்தாலும் இத்தாலியில் 8.0வீதத்தாலும் ஸ்பெயினில் 12வீதத்தாலும் ஐரோப்பிய யூனியன் முழுவதிலும் 15வீதத்தாலும் வீழ்ச்சியடையும்.

அதாவது எதிர்கணிய வளர்ச்சி வீதமே காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. தொழில்நுட்பமும் உற்பத்திக் கட்டுமானங்களும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்வாறான நிலைகாணப்படுவதால் வளர்ந்து வரும் இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் போன்ற பெரிய நாடுகளினதும் ஏனைய நாடுகளினதும் பொருளாதாரம் கொரோனா நெருக்கடியால் சரிந்துவிட்டது. அந்நாடுகளின் ஏற்றுமதி உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துவிட்டன. பங்குச்சந்தைகள் மூடப்பட்டுள்ளன. பெரிய உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்திவிட்டன. தொழிலாளர் வேலையிழந்து விட்டனர். உதாரணமாக அமெரிக்காவில் வாரத்தின் ஆரம்பத்தில் 3.3 மில்லியன் மக்கள் வேலையிழந்தனர். அதேவாரத்தின் இறுதியில் 6.6 மில்லியன் மக்கள் வேலை தேடுகின்றனர். அமெரிக்காவின் பங்குச் சந்தை 30வீதத்தால் வீழ்ச்சியடைந்து விட்டது சீனாவின் வாகன விற்பனை 86வீதத்தாலும் அமெரிக்காவின் மோட்டார் கார் விற்பனை 40 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது என்ற செய்தியும் வெளியாகியுள்ளது. உலகின் எல்லா நாடுகளின் ஏற்றுமதி இறக்குமதி வீழ்ச்சியடைந்துள்ளது. இது அரச வரிவருவாயிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எல்லாத் துறைகளிலும் எல்லா மட்டங்களிலும் தொழில் புரிந்த தொழிலாளர்களும் வேலையிழந்துள்ளனர்.

கொரோனாவின் பின்விளைவுகளே நாடுகளின் பொருளாதாரப்பாதையை நிர்ணயிக்கிறது. எல்லா மக்களும் எல்லா அரசும் ஒரேவிதமான சவாலையே எதிர்கொள்கின்றனர். இன்று நாம் வைரஸின் முதல் சுற்றை எதிர்கொண்டுள்ளோம். அடுத்த சுற்று என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பற்றிய எதிர்வு கூறல்கள் இருந்தபோதும் இதன்தாக்கம் பற்றி அளவிட முடியாதுள்ளது.

ஒவ்வொரு நாடும் பழைய சாதாரண நிலைக்குச் செல்வதற்கு அதாவது புதிதாக சாதாரணநிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். அதற்கு பெருமளவான மூலதனப் பாய்ச்சல் ஏற்படவேண்டும். இங்குதான் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் உதவி தேவைப்படுகிறது. முன்னைய காலத்தில் ஒருநாடு பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொள்ளும் போது அவ்விரு சர்வதேச நிறுவனங்கள் நெருக்கடியுள்ள நாடுகளுக்கு உதவியுள்ளது. இன்று உலகவங்கி நாடுகளின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார வளர்சியை ஏற்படுத்துவதற்கும் மூலதனப் பாய்ச்சலை ஏற்படுத்துமா? உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை ஸ்திரப்படுத்த சர்வதேச நாணயநிதியத்தால் முடியுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. முன்னர் உலகின் ஏதோ ஒரு நாடு மாத்திரம் பாதித்த போது இதுசாத்தியமாய் இருந்தது. இன்று எல்லா நாடுகளுமே பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை இன்னமும் உறுதியளித்த 127 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவில்லை எனச் சொல்லப்படுகிறது. இன்று நாடுகளின் மீள் எழுச்சி என்பது உலகளாவிய பிரச்சினையாக உள்ளது. மீள் எழுச்சிக்காகவும் சாதாரண நிலைக்கு செல்வதற்கும் ஒவ்வொரு நாடும் சர்வதேச நிதி நிறுவனங்களையும் நட்பு நாடுகளையும் எதிர்பார்த்து நிற்கிறது. இலங்கை போன்ற நாடுகளின் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்கனவே பெற்ற கடனுக்காக இலங்கை 3.2 ரில்லியன் டொலரை 2020 டிசெம்பருக்குள் செலுத்த வேண்டும். இந்நிலையில் மீள் எழுச்சிக்காக அரசு முதலிடுவது என்பது எவ்வாறு சாத்தியமாகும்.

இலங்கை மத்திய வங்கி மூலதனக்கடன் பெற்றவர்கள் திருப்பிச் செலுத்தக்கூடிய நிலையில் இல்லாமையால் திருப்பிச் செலுத்தும் காலத்தை 3 மாதத்திலிருந்து 6 மாதமாக பிற்போட்டு உற்பத்தியாளர்களுக்கு சலுகை வழங்கியுள்ளது. அத்தோடு முயற்சியாளர்கள் தங்கள் மூலதனப்பாய்ச்சல் அளவுகளை வங்கி முகாமையாளர்களுடன் கலந்துரையாடி மீளச்செலுத்தும் காலத்தை தீர்மானிப்பதற்கு மத்தியவங்கி அனுமதி வழங்கியுள்ளது. இவையெல்லாம் உற்பத்தியைத் தொடர்வதற்கான ஊக்குவிப்பாகும். அத்துடன் நிறுவனங்களின் மூலதனத் தேவையைக் கருத்தில்கொண்டு 2 மாதத்திற்குத் தேவையான தொழிற்பாடு மூலதனத்தில் 25 வீதத்தை 4 வீத வட்டியில் பெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வங்கிகள் 50,000 ரூபா குறைந்த தொகையுடைய கடனட்டைக்கான வட்டியிலும் சலுகைககளை வழங்கியுள்ளது.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட 80,000 தொழிலாளரும் 19 இலட்சம் பேர் நாட் சம்பளத்திற்கு வேலை செய்பவர்களாகவும் 14 இலட்சம் பேர் சிறு வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாகவும் இலங்கைப் பொருளாதாரத்தில் 80 வீத உற்பத்தி சிறிய, நடுத்தர தொழில் துறையாலும் முறைசாராத வகையில் கிராமிய விவசாயம், கால்நடை மற்றும் மிருக வளர்ப்புகளாலும் உற்பத்தி நடை பெறுகின்றது. இவற்றில் அதிகமான மக்கள் பங்கு கொள்வதால் அம்மக்களை மீட்டெடுப்பதற்காக சமுர்த்திக் கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணமாக 10,000 ரூபா அரச மானியமாக வழங்கப்படுவது இன்றைய தொழிலாளி நாளைய தொழிலாளியாக இருந்து நாட்டின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்யவேண்டும் என்பதற்காகவே. அத்தோடு பிரதேச ரீதியாக 25 மாவட்ட அரச அதிபர்களுக்கும் தலா 10 மில்லியன்ரூபா வழங்கப்பட்டுள்ளது. தனியார் துறையில் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பை வழங்குவதற்கு நிறுவனங்கள் மூலதனப்பாய்ச்சலை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். இதற்காக மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு சலுகைகளை வழங்கி உற்பத்திகளை விரைவாக ஆரம்பிப்பதற்குத் தடைகளை அகற்றி ஊக்கம் கொடுக்க வேண்டும். இலங்கை அரசு வணிக வங்கிகளுக்கு ஒரு வீத வட்டியில் 50 மில்லியன்பணம் கொடுத்துள்ளது. வணிகவங்கிகள் உற்பத்தி நிறுவனங்களுக்கு 3வீதம்-4வீதம் உற்பத்திக் கடன் வழங்குகின்றது. இவை சிறிய நிறுவனங்களுக்கான கடன் சலுகையாக இருக்கிறது. பெரிய நிறுவனங்களுக்கு எந்தச் சலுகையும் அறிவிக்கப்படவில்லை.

பெரிய நிறுவனங்கள் அதிக வேலைவாய்ப்பை வழங்குவதால் பழைய நிலைக்கு பொருளாதாரத்தைக் கொண்டுவர முதலீட்டு ஊக்குவிப்புகள் வழங்கவேண்டும். இச்செயற்பாடுகள் தடையின்றி நிகழ்வதற்கு அரசிற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. இதற்காக வெளிநாட்டுக்கடன்களைப் பெற வேண்டும். இன்று வெளிநாடுகளும் பாதிக்கப்பட்டிருப்பதால் கடன்களைப் பெறுவது சாத்தியமற்றதாக காணப்படுகிறது.

மக்களிடம் சேமிப்பு இல்லை. அரச வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்காவிலிருந்து கிடைத்த GSP வரிச்சலுகையால் கிடைத்த வருவாயும் தற்போது இல்லை. அரசாங்கம் வரி வீதங்களை 15 வீதத்திலிருந்து 8 வீதமாகக் குறைத்து முயற்சியாளருக்கு முதலீட்டிற்கான சேமிப்பை உயர்த்த வழிவகை செய்துள்ளது. இதனால் அரச வருவாய் வீழ்ச்சியடைந்துவிடும் ஆபத்தும் உள்ளது. இன்று கொரோனாவிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான சுகாதாரச்செலவும் உயர்ந்துள்ளது.

தனியார்துறை நிறுவனங்களின் சொத்து மதிப்பு பங்குச்சந்தைகளில் நிறுவனப்பங்குகளின் விலையில் தங்கி இருக்கும். கொரோனா நெருக்கடிகளின் பின்னர் பங்குச்சந்தை கூடவும் முடியவில்லை. தனியார்துறை நிறுவனங்களின் பங்குகளின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உதாரணமாக 100 ரூபா பங்கு ஒன்றின்விலை 50 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கைகள் மீள இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம், மிகக்குறைவாக இருப்பதால் பங்குச்சந்தை தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் வாய்ப்புக்களே காணப்படுகிறது. இந்நிலையில் மீள்எழுச்சி காலம் தாழ்த்தியே இடம்பெறும்.

மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்தாலும் உலகில் எண்ணெய்க்கான கேள்வி வீழ்ச்சியடைந்தாலும் உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்தியுள்ளன. இதனால் அந்நாடுகளில் பணிபுரிவோரில் 5 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். இவர்கள் இலங்கைக்கு திரும்பும் போது இலங்கையில் வேலையின்மை அதிகரிப்பதோடு அவர்கள் சார்ந்த சமூக செலவும் அரசுக்கு பெரும்சுமையாக அமைந்து விடும்.

சிறிய, நடுத்தர கைத்தொழில் நிறுவனங்கள் முழுமையாக செயலிழந்துள்ளன. இலங்கையில் 47 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். கொழும்பு பங்குச்சந்தையிலிருந்து 4 பில்லியன் டொலர் வெளியேறியுள்ளது. கடந்த சில மாதங்களில் மத்திய வங்கியால் 170 மில்லியன் பணம் புதிதாக வெளியிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் மதிப்பீட்டில் இலங்கை மிகமோசமான பொருளாதார நெருக்கடியை சந்திக்கப்போகிறது என மதிப்பிட்டுள்ளது. இலங்கை கடனுக்கான வட்டியாக தனது வருமானத்தில் 65 வீதத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. மூடப்பட்ட கட்டுநாயக்க மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள 244 கைத்தொழிற்சாலைகள் மீள தொழிற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகள் மீள் எழுச்சிக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இங்கு மக்களையும் உற்பத்தி நிறுவனங்களையும் மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் செலவிடுகின்றது. பிரான்ஸ் ஜேர்மனி, டென்மார்க், அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்தில் ஒருபகுதியை அரசாங்கம் உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்குகிறது. இது சாதாரண நிலை வரும் வரைக்கும் என்ற உத்தரவாதத்துடன் நடைபெறுகிறது. இலங்கையிலும் தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை தொடர்ந்து வழங்கவேண்டும் என அரசு அறிவித்துள்ளது.

எந்தவித உற்பத்தியும் நடைபெறாத வேளையில் நிறுவனங்களால் இதனை செய்யமுடியுமா? என்றகேள்வி எழுகிறது. அரசின் ஊரடங்கு சட்டத்தால் விவசாய நடவடிக்கை நின்றுவிட்டது, ஆழ்கடல் மீன்பிடி நின்றுவிட்டது. ஆலைக்கைத்தொழிலும் சிறுகைத்தொழில்களும் முடக்கப்பட்டுவிட்டன. உற்பத்தித் துறைகள் முடக்கப்பட்டதால் நாளாந்த கூலித்தொழிலாளர்கள் வேலையை இழந்துள்ளனர். இவர்கள் முழுவறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். சாதாரண நிலை ஒன்று ஏற்படுமிடத்து விரைவான உற்பத்திக்கு வழி சமைக்கும் வகையில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுக்கவேண்டும்.

கொரோனாவைக் கட்டுப்படுத்தக்கூடிய சுகாதார மேம்பாடு முதல் நிலைத் தேவை அதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடுவோம் என்ற நம்பிக்கையோடு பொருளாதாரத்தை மீளத்திறந்து விடுதல். படிப்படியாக நடைபெறக்கூடியது எல்லாவற்றையும் மூடி விட்டு பின்னர் மெதுவாகத் திறப்பதென்பது சுலபமான காரியமல்ல. அதிகமான தொழிலாளர் வீட்டிலிருந்தே வேலை செய்தல் என்பதை விரிவுபடுத்தலாம். கொரோனாக் காலத்தில் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைகள் தொடங்கப்பட்டன. இதையே தொடர்வதென்பது எந்தளவிற்கு சாத்தியமாகும் என்பது அறியமுடியாதுள்ளது. எல்லாத் தொழில்களையும் வீட்டில் இருந்து செய்ய முடியாது.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஏற்றி இறக்குதல், போக்குவரத்து போன்றவை வீட்டிலிருந்து கணனி ஊடாக செய்யமுடியாது. எந்தத் துறையில் இதுசாத்தியம்,எந்தத் துறையில் இதை மேலும் விரிவுபடுத்தலாம் என்பதை முதலில் பட்டியலிட வேண்டும். கொரோனாவையும் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தையும் முன்னைய நிலைக்கு அல்லது புதிய ஒழுங்கு ஒன்றுக்கு கொண்டுவருதல் என்பது சிரமமான விடயமாக இருந்தாலும் அதுவே இன்றைய தேவை. சீனாவும் தென் கொரியாவும் கொரோனாவைக் கட்டுப்படுத்திக் கொண்டே வர்த்தகத்தைத் தொடர்கிறது. தடைகளை விரைவாக தளர்த்தி சுமுக நிலையை தொடங்கியது.

இனிவரப்போவது புதிதான சாதாரண நிலை. முதலில் கொரோனா பரவுவதைத் தடைசெய்ய வேண்டும் .இரண்டாவது பொருளாதாரம் நிலைகுலையாது நிற்கவைக்க வேண்டும். இதுவே விரைவான மீள்வருகைக்கு உதவக்கூடியது. வைரஸ் கட்டுப்பாடு காலதாமதமானால் மீட்டெடுக்கும் பொருளாதாரத்தின் செயற்பாடு பின் தள்ளப்படுவதோடு பொருளாதார வளர்ச்சியும் மட்டுப்படுத்தப்பட்டு விடும். ஏதாவது பிரமிக்க வைக்கக்கூடிய தொழில்நுட்பத்தினூடாக சுகாதாரத்தை பழைய நிலைக்கு அல்லது மேலோங்கிய நிலைக்குக்கொண்டு வரக்கூடிய முதலீடே இன்றைய காலத்திற்கான பொருத்தமான முதலீடு. அதுவே மீளத்திறப்பதை ஊக்குவிக்கும் காரணியாகி சாதாரண நிலைக்கு விரைவாகக் கொண்டு செல்லும்.

# இலங்கை- சீன ஜனாதிபதிகள் தொலைபேசியில் கலந்துரையாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் தொலைபேசி ஊடாக கலந்துரையாடினர்.

சீனாவின் சிஜிடிஎன் செய்திச் சேவை இதுகுறித்த தகவலை வெளியிட்டது.

கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்கான, தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேவேளை இரு நாடுகளும் பல விடயங்களில் யதார்த்தபூர்வமான ஒத்துழைப்பை முன்னெடுக்க வேண்டும் என சீன ஜனாதிபதி இந்த உரையாடலின் போது வேண்டுகோள் விடுத்தார்.

இரு நாடுகளும் முக்கியமான ஒத்துழைப்பு திட்டங்களை முறையான விதத்தில் முன்னெடுக்க வேண்டும் என சீன ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

புதிய பட்டுப்பாதை திட்டத்தை கூட்டாக கட்டியெழுப்புவதற்காக உயர்தர அபிவிருத்திக்காக இரு நாடுகளும் பாடுபட வேண்டும் எனத் தெரிவித்துள்ள சீன ஜனாதிபதி இலங்கையின் பொருளாதார மீள் எழுச்சிக்கு உதவி செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


சீனா இலங்கைக்கு உறுதியான ஆதரவையும் உதவியையும் வழங்கும் எனவும் சீன ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை மக்கள் கூடிய விரைவில் வைரஸின் பிடியிலிருந்து விடுபடுவார்கள் எனவும் சீன் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொரோனா வைரஸிற்கு எதிரான சீனாவின் போராட்டத்தில் இலங்கை தக்கதருணத்தில் வழங்கிய ஆதரவிற்காக சீன ஜனாதிபதி நன்றியை தெரிவித்தார்.

கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் முக்கிய பங்களிப்பை தொடர்ந்தும் வழங்குவதை உறுதி செய்வதற்கு சீனா இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கும் எனவும் சீன ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஐ)

# தேர்தலில் தான் தோல்வியடைவேன் என்பதை கோடீஸ்வரனே உணர்ந்திருக்கிறார்- கருணா



(கல்முனை)

நாடாளுமன்றத் தேர்தலில் தான் தோல்வியடைவேன் என்பதை அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் உணர்ந்துள்ளார் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் கட்சி ஆதரவாளர்களைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் குறித்து நான் எந்தவித கருத்தையும் கூற விரும்பவில்லை. ஏனென்றால் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைவார் என ஏற்கனவே கூறியுள்ளேன். இதனை அவர் உணர்ந்திருக்கிறார். என்னைப் பொறுத்தளவில் நான் எந்த ஒரு அரசியல்வாதியை பற்றியும் தூற்றுவதில்லை. நாங்கள் புதுமை படைப்பதற் காகத்தான் மக்கள் மத்தியில் வந்து இருக்கின்றோம்.

மக்கள் மத்தியில் நாங்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றோம். எங்கள் கொள்கைப்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தி அதனை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். விமர்சனம் என்பது அரசியலில் சாதாரணமானது. என்னைப் பொறுத்தளவில் என்னை விமர்சிப்பவர்களை நான் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலகளவில் பிரபலமான இலங்கையின் உபசரிப்பு

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவல் அதிகரித்ததால் நாடுகளுக்கிடையிலான விமான சேவைகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு விமான சேவைகள் இடம்பெறாமையால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்நிலையில் நிர்க்கதியாகிய இவர்களை அரவணைக்கும் நாடாக இலங்கை மாறியது.

உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக விளங்கும் இலங்கை மக்களின் உபசரிப்பை உலகுக்குத் தெரியப்படுத்தியவர் இஸ்ரேலியப் பிரஜையான பிரபல ஒளிப்பதிவாளர்



Nuseir Yassin என்பவராவார்.

அவர் தனது காணொலியில் கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபட முயற்சிக்கும் ஒரே நாடு இலங்கை எனத் தெரிவித்தார். எல்ல நகரில் சிக்கிய சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டது.

அதில் சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்தும் அவற்றை நிவர்த்திக்க எல்ல மக்கள் எடுக்கும் முயற்சிகள் குறித்தும் தெரியப்படுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில் இலங்கையின் சுற்றுலாத்துறை மடிந்து போய் விட்டதாக Nuseir Yassin தனது காணொலியில் தெரிவித்தார். உலகம் வழமைக்குத் திரும்பிய பின்னர் இலங்கையர்கள் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டும் என அவர் அந்தக் காணொலியின் மூலம் உலகுக்கு செய்தி ஒன்றை வழங்கினார்.

இலங்கைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருவதன் மூலமாகவே அந்த நன்றிக் கடனைச்செலுத்த முடியும்எனவும்அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

## fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2036 facebook

கதிலன்



மேதினி



நாம் வாழும் வீட்டில் எவ்வளவு வசதி இருக்கிறது என்பதை விட, எவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறது என்பது முக்கியம்

வர்சி



நடைபாதையில் செருப்புத் தைக்கும் தொழி(முத)லாளியின்கண்கள் நடப்பவர்களின்பாதங்களை நோக்கியே இருக்கிறது...வாழ்க்கை

ருசிகா

தூங்கும் நேரம் அதிகமாகிடிச்சு ,கனவு எல்லாம் றிப்பிட் ஆகுது...



அது கூட பரவாயில்லை இரண்டு கனவுக்கு நடுவுல விளம்பரம் வருகுதே...கடவுளே

சிவானி




சிவானு

சோம்பேறி என்று சொல்லக் கூடாது...



ஓய்வுப் பிரியர் என்று தான் சொல்ல வேண்டும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெரியகட்டு முகாமிலிருந்து 111 பேர் நேற்று விடுவிப்பு



(குருமன்காடு)

வவுனியா, பெரியகட்டு இரா ணுவ முகாமில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 111 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.


வெலிசறை கடற்படை முகா மைச் சேர்ந்த கடற்படை வீரர் களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய அவர் களது குடும்பத்தினர், உறவினர் கள், அவர்கள் நடமாடிய பகுதி களைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அந்தவகையில், வெலிசறை கடற்படையினருடன் தொடர்பு களைப் பேணிய நிலையில் வவுனியா பெரியகட்டு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கண்டி, கெப்பற்றிக் கொலாவ, அலவுவ, வெலம்பட, மாத்தளை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 111 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப் படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களது தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்து விடு விக்கப்பட்டனர். இதன்போது தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டமைக்கான சான் றிதழ்களும் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன. இதேவேளை, குறித்த 111 பேரையும் இராணு வத்தின் பாதுகாப்புடன் 6 பேருந் துகளில் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களது சொந்த இடங்களில் விடப்பட்டனர். (ஐ-4-250-299)

# பிரதேச சபை வாயிலில் மரக்கறிகளை வீசிய வர்த்தகர்

(முறிகண்டி)

கிளிநொச்சி சேவைச்சந் தையில் வர்த்தக செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் வர்த்தகர் ஒருவர் தமது வர்த்தக நடவடிக்கைக்கு இடையூறாக கரைச்சிப் பிரதேச சபை உள்ளதென தெரிவித்தும் பிரதேச சபையின் செயற்பாட் டால் மரக்கறிகள் பழுதடைந்து தேங்கியதாக தெரிவித்தும் குறி த்த மரக்கறிகளை கரைச்சி பிரதேச சபை பிரதான வாயிலில் வீசிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றது.



குறித்த விடயம் தொடர்பில் வர்த்தகர் தெரிவிக்கையில், கொரோனா அச்சுறுத்தல் காரண மாக தமது வர்த்தக செயற்பாடு கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந் தது. இந்நிலையில் நாடு வழ மைக்குத் திரும்பி வரும் நிலை யில் வர்த்தக செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பி வருகின் றது. நிரந்தரக் கட்டடத்தின் ஒரு பகுதியில் வர்த்தக செயற்பாடு களை ஆரம்பித்துள்ள நிலையில் ஒரு தொகுதியினர் தற்காலிக கொட்டகையிலேயே வர்த்தகத் தில் ஈடுபட்டனர்.

வர்த்தக செயற்பாடுகளிற்காக அனுமதிக்கப்பட்ட பகுதியில் பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலைய உரிமையாளருடன் பேசி வர்த் தக செயற்பாடுகளை முன்னெ டுத்த நிலையில், கரைச்சிப் பிர தேச சபையினால் தடுக்கப்பட்டது.

மழை, வெயில் காரணமாக குறித்த தற்காலிக இடத்தில் வர்த்தக நடவடிக்கைகளை முன் னெடுக்க முடியாதுள்ளது.

இந்த நிலையிலேயே அங்கு நேற்றுக் காலை வர்த்தக நட வடிக்கைக்காகச் சென்றேன். இவ்வாறான நிலையில் கரைச்சி பிரதேச சபையினால் வர்த்தக நிலைய உரிமையாளர் அச்சுறுத் தப்பட்டார். மேலும் கரைச்சிப் பிரதேச சபையின் அடாவடி நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். மிக மோசமாக அவர் கள் நடந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கரை ச்சிப் பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனி டம் வினவியபோது,கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப் பகுதியில் சுகாதாரப் பிரிவின் அறி வுறுத்தலிற்கமைவாக நெரிச லைக் குறைப்பதற்கான நடவடிக் கைகளை கரைச்சிப் பிரதேச சபை முன்னெடுத்திருந்தது.

அந்த வகையில் நெருக் கமான பகுதி வரிசைகள் இர ண்டை சீட்டு முறைமூலம் வழங் குவதற்கு வர்த்தக சங்கம் நடவ டிக்கை எடுத்தது.

குறித்த வர்த்தகரின் கடை வரிசை தவிர்ந்த மற்றைய வரி சைக்கு சீட்டு கிடைத்தமையால் அவர்கள் நிரந்தரக் கட்டடத்தில் வர்த்தக செயற்பாடுகளை கடந்த திங்களன்று ஆரம்பித்தனர். எதிர்வரும் திங்கட்கிழமை மற் றைய வரிசையிலும் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற் கான முயற்சிகளை மேற்கொண் டுள்ளோம்.

அதுவரை அவர்கள் வழமை போன்று தற்காலிக இடத் திலேயே வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும். இக்கட்டான காலப் பகுதியில் வர்த்தகர்கள் பிரதேச சபையின் நடவடிக்கைகளிற்கு ஒத்துழைத்திருந்தனர்.

ஏனைய பிதேச சபைகள் சேவை சந்தைகளை பொது வெளி களிலும் விளையாட்டு மைதா னங்களிலும் முன்னெடுத்தன. ஆனால் கரைச்சிப் பிரதேச சபை யின் சேவை சந்தை அந்த வளா கத்திலேயே முன்னெடுக்கப்பட் டது. இவ்வாறான நிலையில் ஏனைய வர்த்தகர்கள் அமைதி யாக இருக்க குறித்த வர்த்த கர் மாத்திரம் இவ்வாறு செய ற்பட்டதாகவும் அவர் தெரி வித்தார். (ஐ-4-100-312)

# சுகாதார நடைமுறைகளை கண்காணிக்க வவுனியாவில் ஐந்து குழுக்கள் நியமனம்



(நெளுக்குளம்)

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் வவுனியாவின் சுகாதார முன்னேற்ற நிலைமை தொடர் பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவ லகத்தில் நேற்று இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் சு.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற கலந் துரையாடலில் இராணுவத்தி னர், பொலிஸார், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரப்பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது சுகாதாரப்பிரிவி னரால் வழங்கப்பட்ட அறிவுறுத் தல்களை வியாபார நிலையங் களின் உரிமையாளர்கள் மற் றும் ஊழியர்கள் சரியான முறை யில் கடைப்பிடிக்கின்றார்களா? என்பதனை கண்காணிக்கும் செயற்பாடொன்றை முன்னெடு ப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ள துடன் அதற்காக 5 குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

குறித்த குழுவினர் நேற்றைய தினமே வவுனியாவில் அமைந் துள்ள வியாபார நிலையங்க ளிற்கு நேரடியாக விஜயம் செய்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வியாபார நிலையங்களிற்கு அறி வுறுத்தல்களையும் வழங்கியி ருந்தனர். மேலும் குறித்த செயற் பாடு தொடர்ந்து முன்னெடுக்கவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4-299)

# "மே-18" வீடுகள் முன் தீபங்கள் ஏற்றி இனப்படுகொலையை நினைவுகூருவோம்

(முள்ளிவாய்க்கால்)

சிங்கள அரசால் முள்ளி வாய்க்காலில் திட்டமிட்டு தமி ழின வயது வேறுபாடின்றி, பால் பாகுபாடின்றி கொன்றொழிக் கப்பட்ட 11ஆம் ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் மைதானத்தில் உணர்வெ ழுச்சியுடன் நினைவுகூரப்பட வுள்ளது.

அன்றைய தினம் மாலை 7 மணிக்கு அனைத்து வணக் கஸ்தலங்களிலும் விசேட மணி ஒலி எழுப்பியும் வீடுகளின் முன் தீபங்கள் ஏற்றி முள்ளிவாய்க் கால் இனப்படுகொலையை நினைவுகூருமாறும் இப்பேர வல நிலைமையை நினைவு படுத்தும் வகையில் அன்றைய தினம் கஞ்சி தயாரித்து பகிர்ந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள் அனைவரையும் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் பொதுக்கட் டமைப்பு கேட்டுக் கொண் டது. (இ-4)

# அதிகரிக்கும் காட்டு யானைகள் அட்டகாசம்





(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளம் பிரதே சத்தில் யானைகள் மக்கள் குடி யிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்து சேதம் விளைவித்தமையால் மக்கள் பெரும் இழப்புக்களை சந்தித்தனர்.

நேற்று முன்தினம் இரவு வீர புரம் மற்றும் சின்னத்தம்பனை கிராமங்களுக்குள் புகுந்த யானை மக்கள் குடிமனைப்பகு தியில் இருந்த பயன்தரு மரங் களைச் சேதப்படுத்தியதுடன் தோட்டச் செய்கையையும் துவம் சம் செய்துள்ளது.

வீட்டு வளவினுள் காணப் பட்ட பனை மரங்களில் பழங்களை வீழ்த்தி சேதப்படுத்தியதுடன் விளாமரங்களில் உள்ள பழங்க ளையும் கீழே வீழ்த்தியுள்ளது.

அத்துடன் அண்மைக்கால மாக வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்ளுமாறு விவசாயத் திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வரும் நிலையில் அத்திட்டத்தினை மேற்கொண் டவர்களது தோட்டங்களையும் அதிகளவில் சேதப்படுத்தியுள் ளதாக அப்பகுதி மக்கள் தெரி வித்தனர்.

எனவே தொடர்ச்சியாக யானையின் அச்சுறுத்தலுக்குள் வாழும் தமது கிராம மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பை வழங் குவதுடன் தமது ஜீவனோபாயச் செய்கையான தோட்டச்செய் கைக்கும் பாதுகாப்பு தரவேண் டும் என கோரிக்கை விடுத் தனர். (ஐ-4-299)

# கசிப்புடன் மூவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாய வனூர் மற்றும் புதுக்காடு, குமாரசாமிபுரம் போன்ற பகுதி களில் சட்டவிரோத கசிப்பு விற் பனையில் ஈடுபட்ட குற்றச்சாட் டிலும் கசிப்பு உற்பத்தியிலும் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 12 ஆம் திகதி மூவர் கைது செய் யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 34 லீற்றர் கசிப்பும் 230 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டது.

மேலதிக விசாரணைகள் நடைபெற்று பின்னர் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக் கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்தார். (ஐ-4-316)

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2020- 15.06.2020



சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி, கேது ஆகிய இரண்டு கிரகங்கள் பார்வையும் செவ்வாய் மீது பதிகின்றது. எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்திலும் சிறுசிறு தொல்லைகள் வந்து அலைமோதலாம்.

இம்மாதத் தொடக்கத்தில் வாக்கு ஸ்தானத்தில் சூரியனும், புதனும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே புத ஆதித்ய யோகம் உருவாகின்றது. குழந்தைகளின் கல்வி சம்பந்தமாக மனக்குழப்பத்தில் இருந்த உங்களுக்கு இம்மாதம் நல்ல பதில் கிடைக்கப் போகின்றது. வாக்கு ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் கோபம் கொஞ்சம் அதிகமாக வரலாம். 9 ஆம் இடத்திற்கு அதிபதியான குரு பகவான் நீசம் பெற்றிருப்பதால் தந்தையின் உடல்நலத்தில் கவனம் தேவை.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

மே 24 ஆம் திகதி மிதுன இராசிக்கு புதன் செல்கின்றார். இக்காலம் எதிர்பார்த்த நன்மைகள் எதிர்பார்த்தபடியே கிடைக்கும் நேரமாகும். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இது 3 ஆம் இடம் என்பது சகாய ஸ்தானம் என்று அழைக்கப்படும் இடமாகும். அந்த இடத்திற்கு அதிபதியான புதன் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது இதுவரை இருந்த தடைகள் அகலும். பணிபுரியும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சலுகைகள் கூட மீண்டும் கிடைக் கும்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

இதுவரை உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், வக்கிர இயக்கத்தில் ஜூன் 3 ஆம் திகதி பின்னோக்கி ரிஷப இராசிக்கு செல்கின்றார். ரிஷப இராசிக்கு சுக்கிரன் சொந்த வீடாகும். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். 2




ஆம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும். இந்த நேரத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். குடும்பத்தில் கூடுதல் வருமானம் வருவதற்கான வழி பிறக்கும்.

உங்கள் இராசிக்கு சப்தமாதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். எனவே கல்யாணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இதுவரை தடை ஏற்பட்டிருக்கலாம். அவை நீங்கும் நேரமிது. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் இல்லத்து பூஜையறையில் விளக்கு ஏற்றி லட்சுமி கவசம் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் மனக்குழப்பங்கள் அதிகரிக்கலாம். உங்கள் இராசிநாதனை சனி பகவான் பார்ப்பதால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை.

கூட்டுக்குடும்பத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உடன் பிறப்புகளின் இல்லங்களில் சுபகாரியங்கள் நடைபெறலாம்.

பணிபுரியும் பெண்களுக்கு உடன் பணிபுரிபவர்களை அனுசரித்து செல்லவும். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் இராசியிலேயே தனாதிபதி புதன் அமர்ந்து பரிவர்த்தனை யோகம் பெறுகின்றார். தற்சமயம் அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. மேலும் அஷ்டமத்தில் கேதுவும் வீற்றிருப்பதால் சர்ப்ப தோஷம் உருவாகின்றது. எனவே சஞ்சலங்கள் அதிகரிக்கும். சந்தோஷக் குறைபாடுகள் வரலாம். ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

குரு பகவான் உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாவார். எனவே அவர் நீச்சம் பெறுவதால் எதிர்பாராத விதத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். என்ன இருந்தாலும் அஷ்டமத்தில் சனி மட்டுமல்லாமல் கேதுவும் அல்லவா இருக்கின்றார். எனவே ஒருசில காரியங்களில் தொடக்கம் நன்றாக இருந்தாலும் முடிவு சரியாக இருக்காது.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

மே 24ஆம் திகதி மிதுன இராசிக்குப்



புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 2 ஆம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும். 5 ஆம் இடம் என்பது புத்திர ஸ்தானம், பாக்கிய ஸ்தானம் என்று அழைக்கப்படும் இடமாகும்.

தன ஸ்தானத்தில் புதன் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் வளர்ச்சி கூட வழிபிறக்கும். பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

இதுவரை உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் இப்பொழுது உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். கரைந்த சேமிப்பு




களை ஈடுகட்டுவீர்கள். ஜூன் 3 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் சுக்கிரன் உங்கள் இராசிக்கே வருவதால் மறைமுக எதிர்ப்புகள் ஓரளவு உண்டு என்றாலும் அது பாதிக்காது. ஆரோக்கியத்தில் தொல் லைகள் ஏற்படலாமே தவிர பயப்பட வேண்டிய சூழ்நிலை இல்லை. இடமாற்றம் செய்யலாமா?, வீடுமாற்றம் செய்யலாமா? அல்லது உத்தியோகத்திலாவது மாற்றம் கிடைக்குமா? என்றெல்லாம் சிந்தித்து மனக்குழப்பத்தில் இருந்த உங்களுக்கு நல்ல பதில் கிடைக்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் இல்லத்து பூஜை அறையில் விநாயகர் அகவலும், சனி கவசமும் படித்து வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கமும், அஷ்டமத்து கேதுவின் ஆதிக்கமும் இருப்பதால் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லவும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார்.

எனவே அதிக விரயங்களை சந் திக்கும் மாதமாக இம்மாதம் அமையப் போகின்றது. உங்களுக்கோ, உங்களைச் சார்ந்த குடும்பத்தினர்களுக்கோ மருத் துவச் செலவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக அமையும்.

உங்கள் இராசிக்கு குரு பகவான் 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குருபகவான் அஷ்டமத்தில் மறையும் பொழுது யோகத்தைக் கொடுப்பார்.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத் திற்கு அதிபதியான புதன், மே 24 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார்.

இக்காலம் ஓரளவு நன்மைகளையே ஏற்படுத்தும் காலமாகும். நீங்கள் யோசிக்காது செய்யும் செயல்களில் கூட வெற்றி பெறுவீர்கள். உடனிருக்கும் குடும்ப உறுப்பினர்கள் குணமறிந்து செயற்படுவர்.

வம்பு, வழக்குகள் தீரும். வருமானப் பற்றாக்குறை அகலும். இக்காலத்தில் மருத்துவச் செலவுகள் குறையும்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த சுக்கிரன் விரய ஸ்தா




னத்திற்கு ஜூன் 3 ஆம் திகதி செல்லவிருக்கின்றார். வக்கிர இயக்கத்தில் சுக்கிரன் வரும் பொழுது, பல வழிகளிலும் உங்களுக்கு மாற்றங்களும் வரும். ஏமாற்றங்களும் வரும். விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம். கலை ஆர்வமிக்க ஒருவர் உங்களுக்கு உறுதுணையாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பார். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் உருவாகும்.

சுக்கிரன் உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். புத்திர ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியாக இருப்பதால் பிள்ளைகளால் விரயம் உண்டு என்பதைக் காட்டும் நேரமிது.

எனவே பெண் பிள்ளைகளின் கல்யாணம் போன்றவற்றை அமைக்க முடிவெடுக்கலாம். பணிபுரியும் இடத்தில் இருந்த தொல்லைகள் அகலும்.

பெண்வழிப் பிரச்சினைகள் நீங்கும். பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். இம்மாதம் ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருப்பதால் இல்லத்து பூஜை அறையில் நாக கவசம் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டிய மாதமாகும். ஆரோக்கியத்திலும் சிறுசிறு



தொல்லைகள் ஏற்பட்டு அகலும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்க வேண்டுமானால் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

தாய்வழி ஆதரவும், உடன் பிறப்புகளால் நன்மையும் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும்.


(தொடரும்)

# கிராம மக்கள் மீது தாக்குதல்! மூவர் காயம்; மூவர் கைது

## 10 பேர் கொண்ட குழு அட்டகாசம்

(மாத்தறை)

**மாத்தறை வெலிகம, மிதிகம துர்கி கிராம மக்கள் மீது இனந்தெரியாத குழுவினர் நேற்று முன்தினம் தாக்குதல் மேற்கொண்டனர்.**



தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் 10 பேர் அடங்கிய குழுவொன்று இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு தாக்குதலை மேற்கொண்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஆயுதங்கள் மற்றும் கைத்துப்பாக்கிகள் சந்தேக நபர்களிடமிருந்தமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதுடன் இந்தத் தாக்குதலில் காயமடைந்த மூவர் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இளைஞர்களுக்கும் ரூ.5,000 கிடைக்கும்

## அமைச்சர் ஆறுமுகன் நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸால் தொழில் வாய்ப்பை இழந்து, பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வந்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் அரசாங்கம் வழங்கும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், பெருந்தோட்டப் பகுதிகளுக்கு கொழும்பிலிருந்து வந்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

தொண்டமானின் கோரிக்கையை ஏற்ற ஜனாதிபதி, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான பொருளாதாரப் புத்தெழுச்சி, வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதியின் செயலணிக்கு இது தொடர்பில் கடிதத்தை உத்தியோகபூர்வமாக அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்.

அதன்படி, அமைச்சரவைக் கூட்டம் நிறைவடைந்த உடன் இது தொடர்பான கடிதத்தைச் செயலணிக்கு அமைச்சர் அனுப்பினார் என்றும் அதன் பிரதிகள், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. (இ-7)

# பிள்ளையார் கோவில் வளாகத்தில் பிக்குவின் உடல் தகனம்

# ஞானசாரருக்கு எதிரான வழக்கு செப்டெம்பர் 16இல் விசாரணைக்கு

(கொழும்பு)


பொதுபலசேனா அமைப் பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை, செப்டெம்பர் 16 ஆம் திகதி ஆராயவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, பழைய செம்மலை - நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் விகாரை அமைத்து தங்கியிருந்த பௌத்த பிக்கு இறந்ததையடுத்து அவரது உடல் நீதிமன்ற உத்தரவை மீறி ஆலய வளாகத்தில் தகனம் செய்யப்பட்டது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான பௌத்த பிக்குகளே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை மீறி ஆலய வளாகத்தில் சடலத்தை தகனம் செய்த கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட மூவருக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரான நீதியரசர் ஏ.எச்.எம்.டீ.நவாஸ், நீதியரசர் சோபித ராஜகருண ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டது.



இதன்போது, இந்த மனுவை செப்டெம்பர் 16 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆத்திரத்தில் அர்த்தமில்லை!

அனுபவசாலியான ஒரு முஸ்லிம் பெரியவர் இருந்தார். நிறைய விடயங்கள் தெரிந்தவர். இந்த உலகத்திலே எப்படி வாழ வேண்டும் என்பதை அவர் பல பேருக்கு சொல்லிக் கொடுக்கின்ற தகுதியுடையவர். அந்தப் பெரியவரைத் தேடி ஒரு ஆள் வந்தான். மிகவும் படபடப்பாக இருந்தான். முகத்திலே கோபம். வந்த வழியிலே யாரிடம் என்ன தகராறோ! யாருக்குத் தெரியும்? வந்தவன் என்ன செய்தான் தெரியுமா?

காலில் இருந்த செருப்பைக் கழற்றி கோபமாக ஒரு மூலையில் வீசி எறிந்தான். கதவை வேகமாக "படார்" என்று சாத்தினான். கோபத்திலே இருப்பவன் இப்படித்தான் நடந்து கொள்வான். சும்மா இருப்பதை எல்லாம் தன்னுடைய ஜென்ம விரோதியாக நினைத்துக் கொண்டுதானே இவனும் இப்படி நடக்கிறான். அதற்குப் பின் அவன் மெதுவாக உள்ளே வந்தான்.

பெரியவர் முன்னாடி வந்து நின்றான். மரியாதை செலுத்தினான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "இதோ பாரப்பா உன்னுடைய மரியாதையை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. முதலிலே நீ போய் அந்த செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்டுவிட்டு அதற்கு பின் இங்கே வா!" என்றார். வந்தவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன இது இவர் இப்படிச் சொல்கிறார். செருப்பிடமும் கதவிடமும் மன்னிப்புக் கேட்பதா? அது எப்படி முடியும். அவையெல்லாம் என்ன உயிரோடவா இருக்கு? மன்னிப்புக் கேட்பதற்கு" என்று நினைத்தான். அதை அந்தப் பெரியவரிடமே கேட்டான். அவைக்கெல்லாம் உயிர் இல்லையே! என்றான். அதற்கு அந்தப் பெரியவர் சொன்னார்... "நீ உன்னுடைய கோபத்தை அவர்கள் மீதே காட்டுகின்ற போது இப்படி நினைக்கவில்லையே! அந்தச் செருப்பு இரண்டும் ஏதோ பெரிய தப்புச் செய்தது போல் நினைத்துத் தூக்கி எறிந்தாயே! கதவை போய் பெரிய விரோதியாக நினைத்துக் கொண்டு வேகமாக தள்ளினாய். உன்னுடைய கோபத்தைக் காட்டுவதற்கு மட்டும் இவைக்கெல்லாம் உயிரிருப்பதாக் நினைக்கின்ற போது மன்னிப்புக் கேட்பதற்கும் இவைகளுக்கெல்லாம் உயிர் இருப்பதாகத்தான் நினைக்க வேண்டும்!" என்றார்.

பெரியவர் சொல்வதை மறுக்கக் கூடாது என்று நினைத்து அந்த செருப்புகளிடம் போனான். கும்பிட்டான் நண்பர்களே உங்களை அவமதித்து விட்டேன். மன்னித்து விடுங்கள் என்றான். அடுத்தபடியாக கதவிடம் போனான். ஏதோ கோபத்திலே உங்களைப் பிடித்து அப்படி வேகமாக தள்ளிவிட்டேன். அதற்காக இப்பொழுது வருத்தப்படுகின்றேன்! என்றான். இப்படிக் கேட்டவுடன் அவன் மனது மிகவும் லேசாக ஆகிவிட்டதாம். அமைதியும் சாந்தமும் கிடைத்ததாம். இது அவனுக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்ததாம்.

ஒரு கதவிடமும் ஒரு ஜோடி செருப்பிடமும் மன்னிப்புக் கேட்பதனாலே ஒரு மனிதன் எந்த அளவிற்கு அமைதியும் சந்தோசமும் பெற முடியும் என்பதை அவன் கற்னை கூட செய்து பார்க்க முடியவில்லையாம்! அப்படி மன்னிப்புக் கேட்டதற்குப் பின் அவன் மறுபடியும் உள்ளே போய் அந்த முஸ்லிம் பெரியவர் பக்கத்திலே உட்கார்ந்தான். இப்பொழுது அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"இப்பொழுது நீ கொஞ்சம் அன்பு செலுத்தியதாலே உன்னுடைய பாரம் கொஞ்சம் குறைந்துவிட்டது. இனிமேல் நமக்கிடையிலே நல்லதொரு தொடர்பு இருக்க முடியும்!" என்றும் சொன்னாராம். இதில் இருந்து என்ன தெரியுது?

கோபம் வந்துவிட்டால் செருப்புக்குக்கூட உயிர் இருப்பதாக நினைத்துக் கொள்கிறோம் என்பது தெரியுதா? இல்லையா? கதவிடம் கூட கைகலப்புக்கு தயாராகின்றோம். நம்மிலே சில பேர் தொலைபேசியிடமும் கூட கோபத்தைக் காட்டுவார்கள். பொத்தென்று கோபமாக அதனை வைப்பார்கள்! நம்முடைய கோபத்திற்கு தொலைபேசி என்ன செய்யும் பாவம்!

நம்ம ஆளு ஒருத்தர் செருப்புக்கு மிகவும் மரியாதை கொடுத்துக் கொண்டு இருந்தார். ஒரு கல்யாண மண்டப வாசலிலே அவன் நின்று கொண்டிருந்தான். வெளியிலே வருபவர்கள் கால்களில் எல்லாம் பொத்து பொத்து என்று விழுந்து அவர்களின் செருப்பைத் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டிருந்தான்.

இந்தக் காலத்திலே இப்படியும் ஒரு ஆள் என்று நினைத்துக் கொண்டே கிட்டப் போனேன். என் காலிலேயும் பொத்தென்று விழுந்தான். "ஏனப்பா இப்படி செய்கிறாய்?" என்று கேட்டேன்.

"என்னுடைய செருப்பு காணாமல் போயிடுச்சு சேர். எவன் அதை போட்டுக் கொண்டு வாறான் என்று செக் பண்ணிக் கொண்டிருக்கின்றேன்!" என்றான்...

மனிதனுக்குத் துணிச்சலைப் போல உலகில் உண்மையான நண்பன் வேறு யாருமில்லை.
~ சாணக்கியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா வந்துற்றபோதும் பேரினவாத பேய் அகலாததென்னே!

இராம – இராவண யுத்தம் நடக்கிறது. கும்பகர்ணன் இந்திரசித்து எனப் பெரும் போர் வீரர்கள் மாண்டு போயினர்.

போர்க் களத்தில் அத்தனை ஆயுதங்களையும் இழந்த இராவணன் வெறுங்கையோடு நிற்கிறான்.

நிராயுதபாணியுடன் போர் தொடுப்பது அறமல்ல என்பதால் இன்று போய் போர்க்கு நாளை வா என்கிறார் இராமர்.

உடன் பிறந்த சகோதரன், பெற்றெடுத்த மகன், உற்றார், உறவுகள் என அனைவரையும் இழந்த இராவணன் தன் தோல்வி கண்டு ஜனகன் மகள் தன்னை ஏளனப்படுத்தி விடுவாளோ என்று கவலைப்பட்டானாம். எப்படி இருக்கிறது நிலைமை.

இராவணனின் அந்தச் சபல புத்தி இலங்கையின் பேரினவாதிகளிடம் இன்னமும் இருக்கவே செய்கிறது.

ஆம், நேற்று முந்தினம் 13ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாணம் செம்மணியில் அனுஷ்டித்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் முற்றுப் பெற்ற கொடிய யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தேறிய தமிழின அழிப்பு இந்த உலகம் உள்ளவரை மறக்க முடியாத கொடுஞ் செயல்.

இக்கொடும் போரில் உயிரிழந்த எம் உறவுகளை நினைவு கூருவதைக்கூட படையினர் தடுத்து நிறுத்த முற்பட்டனர் எனும்போதுதான் இராவணனின் நினைவு வருகிறது.

இப்போது கொரோனா எனும் கொடிய நோயினால் உலகம் முழுவதும் அல்லோல கல்லோலப்படுகிறது.

அந்தத் துன்பத்தை இலங்கை மக்களும் அனுபவித்து நிற்கின்றனர்.

அதிலும் படைத் தரப்பையும் கொரோனா துரத்தித் துரத்தித் தாக்குகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாவுக்குரிய பாதுகாப்புடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை அதட்டவும் வெருட்டவும் படையினர் முற்பட்டனர் என்றால், இதைவிட்ட சிறுமைத்தனம் வேறு எதுவுமில்லை எனலாம்.

உலகத்தில் நடக்கின்ற பேரழிவைக் கண்டேனும் மெய்யுணர்வு பெற்றிருந்தால், செம்மணியில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குப் படையினர் தங்கள் மரியாதையைச் செலுத்தி இருப்பர்.

அவ்வாறு செலுத்தியிருந்தால், அந்தோ பேரினவாத நிலைமைகள் தணிந்தன என்று தமிழ் மக்கள் நினைத்திருப்பர்.

ஆனால் கொரோனாவை சாட்டாக வைத்து உங்களைத் தனிமைப்படுத்துவோம் என்று படையினர் அதட்டுகிறார்கள். இங்கு நாம் படையினரிடம் கேட்பது, உங்கள் தனிமைப்படுத்தலை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்புக்கு மட்டும் செய்யாதீர்கள். மாறாக ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களையும் ஒன்றாகத் தனிமைப்படுத்துங்கள்.

உங்களின் தனிமைப்படுத்தல் எங்களுக்கு தாயகம் என்றல்லவோ பொருள்படும்.

# ஒரே கொள்கைத் திட்டத்தைக் கொண்டிருப்பதால் ஐ.தே.க- ஐ.ம.ச. ஒன்றிணைவதில் சிக்கலில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும, ஐக்கிய மக்கள் சக்தியும ஒரே மாதிரியான கொள்கைத்திட்டத்தை கொண்டிருப்பதனால் எதிர்வரும் காலங்களில் ஒன்றிணைவதற்கு எந்தவிதச் சிக்கலும் இல்லை. பொதுத் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின் பின்னரும் ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டால் நாங்கள் இணைந்து செயற்படத் தயாராகவே உள்ளோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயாந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொரோனா தொற்றின் காரணமாக பொருளாதார நெருக்கடி மற்றும் சுகாதார நெருக்கடியை எதிர்நோக்கி வரும் மக்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் பார்க்க தேர்தல் அவசியமற்றது. அதனாலேயே தேர்தலை நடத்த முன்னர் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தெரிவிக்கின்றோம். அதனை ஆளும் தரப்பினர் நாங்கள் தேர்தலுக்கு அஞ்சியே இவ்வாறு கூறிவருவதாக காண்பிக்க முயற்சிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மஹோற்சவம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான மஹோற்சவம் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுநோயைக் கருத்திற்கொண்டு சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய பிற்போடப்பட்டுள்ளதாக ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. நா.சர்வேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். (இ-18)

# கழிவுப்பொருட்கள் கொள்கலன்களை மீண்டும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட கழிவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை தெரிவித்தது.

கடந்த 2017ஆம் ஆண்டு நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட குறித்த கழிவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள், இலங்கைத் துறைமுக அதிகாரசபை வளாகம் மற்றும் கட்டுநாயக்க ஏற்றுமதி வலயத்திலுள்ள தனியார் இடம் என்பனவற்றில் களஞ்சியப்படுத்தப்பட்டன.

சுற்றுச்சூழல் நீதிமையம் முன்வைத்த மனுவிற்கு அமைய, குறித்த கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை மீண்டும் ஏற்றுமதி செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் உத்தரவு பிறப்பித்தது.

இதற்கமைய மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையால் மீள் ஏற்றுமதிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-8)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.பி.இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள லொயலஸ் மண்டபத்தில் இரத்ததான முகாம் நிகழ்வு இடம்பெறும்.

தூர இடங்களைச் சேர்ந்த குருதிக் கொடையாளர்கள் 077 661 6484 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு போக்குவரத்து வசதியைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-18-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மாகியப்பிட்டி, அளவெட்டி, சண்டிலிப்பாய் வடக்கு, டொக்யாட், முள்ளி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கிறிஸ்தவகுளத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 10 மணியிலிருந்து 2 மணிவரை உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை, வங்காலைப் பிரதேசம், சீனத்துறை முகமட்டுப்பித்தன்மடு, புதுக்கமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதை விட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை. -அன்னை தெரேசா**

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## சந்தேசம் (செய்தி)

**கேள்வி:** குருஜீ நீங்கள் எங்களுக்குத் தரும் செய்தி என்ன?

**ஸ்ரீஸ்ரீ:** என்னிடம் செய்தி எதுவுமில்லை. செய்தி கொடுக்கவேண்டுமானால் நீ வெகுதொலைவில் இருக்க வேண்டும். செய்திக்கு தூரம் தொலைவு அவசியம். செய்தி கடந்த காலம் அல்லது எதிர்காலத்தைச் சேர்ந்தது. செய்தி என்பது தனியொருவரைக் குறிப்பிட்டுச் சொல்லாதது. உயிரற்றது. ஞானம் செய்தியாக முடியாது. ஞானி உனக்குச் செய்தியைத் தரமாட்டார். ஆனால் உன்னை விழித்தெழ மாத்திரம் செய்வார்.

**இறைவன் உனக்குச் செய்தியைக் கொடுக்கமாட்டார். இறைவன் உனக்குச் செய்தியைக் கொடுக்க வேண்டுமென்றால், உன்னிடமிருந்து இறைவன் வெகு தொலைவில் இருக்க வேண்டியதாயிருக்கும். இறைவன் உன் உயிரை (மூச்சை) விட உனக்கு அருகாமையில் இருக்கிறார். அவர் எப்படி உனக்குச் செய்தியைக் கொடுக்க முடியும்?**

ஞானிக்குச் செய்தி அவசியமுமில்லை. அவர் செய்தியைக் கொடுக்கவும் மாட்டார். ஞானமடையாதவன் செய்தியைக் கொடுப்பான், அவன் செய்தியையும் வேண்டுவான்- எப்படியும் செய்தியை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது. யாருக்குச் செய்தி அவசியமோ, அவர்கள் அதை உபயோகிக்கமாட்டார்கள். யார் செய்தியை உபயோகிக்க முடியுமோ அது அவர்களுக்குத் தேவைப்படுவதில்லை.

**ஜிம்:** ஞானம், செய்தி இவற்றிற்கிடையே உள்ள வித்தியாசமென்ன?

**ஸ்ரீஸ்ரீ:** இக்கணத்தில் வாழ்வது பற்றி நீ பலமுறை படிக்கக் கூடும். ஆனால் நீ அதை அனுபவிக்கும் போதுதான் அது ஞானமாகிறது. நீ உணவில் அடங்கியுள்ள பொருட்களைப் பற்றிப் படிக்கலாம். ஆனால் நீ உணவைச் சுவைக்கும் போது சொல்லப்பட்டது உணவில் உள்ள பொருட்கள், தயாரிப்பு முறை ஞானமாகிறது.

**ஜிம்:** உண்மையில் இந்த ஞான இதழ்கள் நம் பேச்சுத் தொடர்பை குறைக்கின்றன. (சிரிப்பு)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

**கற்கண்டில் வேப்பெண்ணெய் தடவிவிட்டால் அதன் இனிப்பை வேண்பெண்ணெய் தடுத்து நிற்கும். மின்குமிழின் மீது தார் பூசிவிட்டால் அதன் ஒளியை தார் தடுத்து நிற்கும். இது போல் ஆன்மாவின் அறிவுப் பிரகாசத்தை அறியாமையாகிய ஒன்று தடுத்து மறைத்திருக்கின்றது. அவ்வாறு மறைந்திருக்கின்ற அறியாமை படிப்பதனால் விலகுகின்றது. துணியில் உள்ள வெண்மையாகிய உண்மையை அழுக்கு மறைத்திருக்கின்றது. (தொடரும்)**

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## நலன் தரும் திதிகளும் அவற்றின் பலன்களும்

**தசமி திதி:** இந்தத் திதிக்கு எமதருமன் அதிதேவதை ஆவார். அனைத்து சுப காரியங்களிலும் ஈடுபடலாம். மதச் சடங்குகளைச் செய்யலாம். ஆன்மீகப் பணிகளுக்கு மிகவும் ஏற்ற திதி இது. தீர்த்த யாத்திரை மேற்கொள்ளலாம். கிரகப்பிரவேசம் செய்யலாம். வாகனம் ஓட பழகலாம். அரசு காரியங்களில் ஈடுபடலாம்.

**ஏகாதசி திதி :** இந்த திதிக்கும் ருத்ரன் எனப்படும் சிவன் அதிதேவதை ஆவார். தெய்வங்களுக்கு விரதம் இருக்கலாம். திருமணம் செய்யலாம். காயங்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளலாம். சிற்பம் செதுக்குதல், தெய்வ காரியங்களில் ஈடுபடலாம்.

**துவாதசி திதி :** அதிதேவதை விஷ்ணு பகவான் ஆவார். பொதுவாக மதச்சடங்குகளில் ஈடுபடவும், தெய்வீக காரியங்கள் அனைத்தையும் மேற்கொள்வதற்கு ஏற்ற திதி இது. (தொடரும்)


## கொரோனா வைரஸ்

# அழியலாம்; அழியாமலும் போகலாம்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் நீண்டகாலம் இருக்கலாம் என்றும் ஒரு போதும் அழியாமலும் போகலாம் என்றும் உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது.**




உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. தொடர் ஊரடங்கால் தொழில்கள் முடங்கி உலக பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டது. ஊரடங்கை தளர்த்தி பொருளாதாரங்களை சமநிலைப்படுத்தவும் இரண்டாவது அலை நோய்த்தொற்றுகளைத் தடுக்கவும் உலக நாடுகள் போராடி வருகின்றன. இதன் மூலம் கொரோனா வைரஸின் தாக்கம் இப்போதைக்கு முடிவுக்கு வராது என்றே வல்லுநர்கள் கணித்தனர்.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் அவசரகால திட்ட நிர்வாக இயக்குநர் மைக் ரயான் புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது.

தடுப்பு மருந்து இல்லாமல். உலக மக்களுக்கு போதுமான அளவு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க பல ஆண்டுகள் ஆகக் கூடும். ஒருவேளை கொரோனா வைரஸ் தொற்றுக்கான தடுப்பு மருந்து கண்டறியப்பட்டாலும் அந்த நோய்த்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு பெரும் முயற்சிகள் தேவைப்படும்.

போதுமான அளவுகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றை உலகளவில் விநியோகிப்பதற்கும் தீவிர முயற்சி தேவைப்படும். எனவே நீண்டகாலம் இந்த வைரஸ் இருக்கலாம். நமது சமூகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பரவி வரும் உட்பரவு வைரஸ்களில்ஒன்றாக கொரோனா வைரஸ் மாறலாம். மேலும் இது முற்றிலும் அழியக் கூடிய நிலையை அடையாமலும் இருக்கலாம்.

எச்.ஐ.வி. அழிக்கப்படவில்லை. ஆனால், அந்த வைரஸைக் கட்டுப்படுத்தும் வழிகளை நாம் கண்டறிந்துள்ளோம்.

கொரோனா வைரஸ் எப்போது முடிவுக்கு வரும் என்பதை கணிப்பதையும் என்னால் நம்ப முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-8)

## 111 சுகாதாரப் பணியாளர்கள் பலி!



(மெக்சிக்கோ சிட்டி)

வட அமெரிக்கா நாடான மெக்சிக்கோவில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 111 சுகாதாரப் பணியாளர்கள், இதுவரை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் துறை இணைச் செயலர் ஹியூகோ லாபெஸ் கேடல் கூறுகையில், 'நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு 111 சுகாதாரப் பணியாளர்கள் உயிரிழந்தனர். அவர்களில் 66 பேர் வைத்தியர்கள் ஆவர்.

மேலும் 16 செவிலியர்கள், 29 வைத்தியசாலைப் பணியாளர்கள், பல் மருத்துவ நிபுணர்கள், ஆய்வக நிபுணர்கள் ஆகியோரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தனர்' என கூறினார்.

மெக்சிக்கோவில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு இதுவரை 38,324 பேர் பாதிக்கப்பட்டனர். மேலும், 3,926 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் மட்டும் மெக்சிக்கோவில் 352 பேர் உயிரிழந்தனர். 1997பேர் பாதிக்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவியதிலிருந்து மெக்சிக்கோவில் பதிவான அதிகபட்ச தினசரி உயிரிழப்பு எண்ணிக்கை இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)



**கொரோனாவின் அச்சத்தால்மோட்டார் சைக்கிளில் மஞ்சள், குங்குமம், வேப்பிலை சகிதம் கோவையில் வலம் வரும் முதியவர்.**

# மன வலிமையால் கொரோனாவை வென்ற 113 வயது மூதாட்டி



(மாட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் 113 வயதைக் கடந்த பாட்டி தனது மன வலிமையால்கொரோனா வைரஸ் தொற்று நோயில் இருந்து மீண்டு முற்றிலும் குணமடைந்தார்.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் கடுமையாகப் பாதிப்பு அடைந்துள்ளது.

உலகில் கொரோனாத் தொற்றால் பாதிப்படைந்தோர் பட்டியலில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. அடுத்து இரண்டாவது இடத்தில் ஸ்பெயின் உள்ளது.

நேற்று வரை ஸ்பெயினில் 2 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிப்பு அடைந்தனர். கொரோனாத் தொற்றுக்கு 27 ஆயிரத்துக்கும் மேலானோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், ஸ்பெயின் நாட்டில் 113 வயதைக் கடந்த பாட்டி தனது மன வலிமையால் கொரோனா வைரஸ் தொற்று நோயில் இருந்து மீண்டு முற்றிலும் குணமடைந்தார். (ஜ-2-8)

# ஏ.ரி.எம்.இயந்திரங்கள் மூலம் இந்தோனேஷியாவில் இலவச அரிசி

(ஜகார்த்தா)

கொரோனா தொற்றுக் காரணமாக உலகளாவிய ரீதியில் பல நாடுகள் முடக்கப்பட்டுள்ள நிலையில், தமது நாடுகளின் மக்களுக்காக பல நாடுகள் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் இந்தோனேஷியாவில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு ஏ.ரி.எம். இயந்திரங்கள் மூலம் இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தா உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஏ.ரி.எம். இயந்திரங்கள் நிறுவப்பட்டு நாளொன்றுக்கு ஆயிரம் பேருக்கு 1.5 தொன் அரிசி விநியோகிக்கப்படுகிறது.

இத்துடன் நிவாரணப்பொருட்கள் மற்றும் மின்சார கட்டண தள்ளுபடிகள் உட்பட இந்தோனேஷியாவின் 10 மில்லியன் குடும்பங்களுக்கு சமூக நலனை வழங்குவதாக அந்நாட்டு அரசு உறுதியளித்துள்ளது.

இந்தோனேஷியாவில் 14 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிப்படைந்ததுடன் ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பேருந்து- லொறி மோதல் 8 பேர் பலி; 50 பேர் படுகாயம்

(டில்லி)

மத்திய பிரதேசத்தில் பேருந்து மீது லொறி மோதி விபத்திற்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 50 பேர் படுகாயமடைந்தனர்.

மகாராஷ்டிராவில் இருந்து உத்தரப்பிரதேசத்தில் உள்ள சொந்த இடங்களுக்கு தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற லொறியுடன் மத்தியப் பிரதேசம், குணாவில் உள்ள கேன்ட்.பி.எஸ். பகுதியூடாக வந்த பேருந்து மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற நிலையில் இதன்போது 8 தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் மேலும் 50 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தவர்களின் உடல்களை பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் பல்வேறு தரப்பினர் வேலையில்லாமல் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

தொழிலாளிகள் பலர் சொந்த ஊர்களில் வேலையில்லாமல் வெளி மாநிலங்களில் வேலை செய்துவந்த நிலையில், இந்த ஊரடங்கினால் அவர்கள் சொந்த ஊருக்கே செல்லலாம் என நினைத்து ஆங்காங்கே நடந்தும், லொறிகளிலும் பயணம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


# மைக் பென்சிற்கு தொற்றில்லை

(வோஷிங்டன்)

அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்சிற்கு நடைபெற்ற பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

அமெரிக்கத் துணை ஜனாதிபதி மைக் பென்சின் செய்தித் தொடர்பாளர் கேட்டி மில்லருக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, துணை ஜனாதிபதி மைக் பென்சிற்கு கடந்த இரு நாட்களாக கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிய வந்தது. இந்தத் தகவலை ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தினார். (ஜ-2)



## பொலிஸாரின் தடையை மீறி...

யாழ்.பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் உட்செல்லும் வாயிலில் பொலிஸார் ஒரு மணிநேரமாக காத்திருக்க, பல்கலை கழக பிரதான வாயிலில் மாணவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக பிரதான வாயிலில் நேற்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்த ஏற்பாடு செயப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாலை 6 மணி முதல் யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் உட்செல்லும் வாயில் முன்பாக கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிஸாரினர் காத்திருந்தனர்.

பொலிஸார் அங்கு காத்திருக்க மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் திட்டமிட்டபடி இரவு 7 மணிக்கு பிரதான வாயில் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். மாணவர்கள் அஞ்சலி செலுத்தி முடியும் தருவாயில், பிரதானவாயிலில் நிகழ்வுகள் நடைபெறுவதனை அறிந்து கொண்ட பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து நிகழ்வினை தடுக்க முற்பட்டனர்.

அப்போது மாணவ ஒன்றிய பிரதிநிதிகள் மூவர் தாம் நிகழ்வு முடிந்து திரும்புகிறோம் எனக் கூறி செல்ல முற்பட்ட வேளை அவர்களை புகைப்படம் எடுத்த பொலிஸார் அடையாள அட்டைகளை வாங்கி விபரங்களை குறிப்பெடுத்து கொண்டனர்.

அத்துடன் இவ்வாறான நினைவஞ்சலி நிகழ்வுகளை நடாத்துவது சட்டவிரோதமானது. மாணவர்களாக இருப்பதனால் உங்களை கைது செய்யவில்லை. இல்லை எனில், உங்களை கைது செய்து மூன்று மாத காலம் வரையில் தடுத்து வைக்க கூடிய அதிகாரம் எமக்குண்டு என கடுமையாக மாணவர்களை பொலிஸார் மிரட்டி அனுப்பினர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபெறும் இடங்களுக்கு செல்லும் பொலிஸார் சுகாதார அறிவுறுத்தல்களை காரணம் காட்டி நிகழ்வுகளை குழப்புவதற்கு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## குற்றப் புலனா...

சாட்சியம் வழங்கினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, புத்தளத்திற்கு இடம்பெயர்ந்தவர்களை வாக்களிப்பில் ஈடுபடுத்த மன்னாருக்கு அழைத்துச் செல்வதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளை பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

குறித்த விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீனிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் ஏற்கனவே வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா...

உலகையே அச்சுறுத்தும் கொடிய கொரோனா வைரஸ் காரணமாக வட மராட்சியைச் சேர்ந்த ஒருவர் லண்டனில் மரணமடைந்துள்ளார்.

புலோலி குரும்பசிட்டி பகுதியை சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சத்திய யோகன் என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,60)

## முன்னணி 2ஆம் நாள் முள்ளி...

2009ஆம் ஆண்டு, இறுதிக்கட்டப் போரின் போது, முள்ளிவாய்க்கால் மண்ணில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

நினைவேந்தல் வாரத்தில் முதல் நாளான நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் செம்மணியில் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இந் நிகழ்வில் நேற்று நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் நிகழ்வு, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

அஞ்சலி செலுத்துவதற்காக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்டவர்கள் இந் நிகழ்வில் கூடியதையடுத்து, 60க்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

அத்துடன், அஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கும் பொலிஸாரால் அனுமதி மறுக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடன் பொலிஸார் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதும் பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்குள் அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஈகைச் சுடரினை ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் அக்கட்சி உறுப்பினர் களும் அஞ்சலி செலுத்தினர். (ம-3)

## நாடு முழுவதும் ஞாயிறு ஊரட...

களிலும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

ஏனைய மாவட்டங்களில் எதிர்வரும் 16 சனி வரை இரவு 8.00 மணி ஸ்ரீமுதல் திங்கட்கிழமை அதி காலை 5.00 மணி வரை ஊரடங் குச் சட்டம் நடைமுறையில் இருக்கும். மே 17, ஞாயிறு நாடு முழு வதிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மே 18, திங்கள் அதிகாலை 5.00 மணிக்கு தளர்த்தப்பட்டதன் பின்னர் மே 23 சனிக்கிழமை வரை இரவு 8.00 மணி முதல் அதிகாலை 5.00மணி வரை மட்டுமே அமுலில் இருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதும் இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதார செயற்பாடுகளை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்காக கடந்த 11 திங்கள் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் 16 சனிக்கிழமை வரை தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு மே 18 திங்கள் முதல் மீண்டும் முன்னெடுக்கப்படும்.

முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்று அவ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# பொருளாதாரம் வீழ்ச்சியடைய

### இடமளிக்க முடியாது ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாரிய பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கான கொள்கைகள் நாட்டின் முன் வைக்கப்பட்டுள்ளதால் அவற்றை அடைந்து கொள்ளும் பயணத்தில் தர்க்க ரீதியற்ற சட்ட திட்டங்களை தடையாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட, கைத்தொழில் துறைக்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

பெருந்தோட்ட, கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய நீண்ட காலமாக இருந்துவரும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இக்கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அரசாங்க மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் இருந்து வரும் பிரச்சினைகளை சட்ட வழிமுறைகளுக்கு செல்லாது கலந்துரையாடல் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார். அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச பெருந்தோட்ட கம்பனிக்கு இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் சட்ட ரீதியான பிரச்சினை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. (ம-3)

## யாழில் கொரோனாவால் பாதிக்கப்...

சிகிச்சை பெற்று இரண்டு கிழமைக்கு முன்னர் வீடு திரும்பியவர்கள்.

நேற்றைய பரிசோதனையில் இவர்களில் ஐவருக்கு வைரஸ் தொற்றின் தாக்கம் இன்னமும் சிறிதளவில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவர்கள் ஐவரும் தொடர்ந்தும் இரண்டு கிழமை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

அத்துடன் இரண்டு கிழமையின் பின்னர் மீண்டும் PCR பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என நோய் தொற்று தடுப்பு நிபுணர்கள் அறிய தந்துள்ளனர். ஒருவருக்கு மீள பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பரிசோதிக்கப்பட்டவர்கள் 2 பேர் (ஒருவருக்கு மீண்டும் பரிசோதனை செய்யப்பட வேண்டும்)

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சண்டிலிப்பாய் - ஒருவர் மீள பரிசோதனை செய்யப்பட வேண்டும் என வைத்திய சாலை பணிப்பாளர் தெரிவித்தார். (ம-3)

# கொரோனா வைரஸ் சமூக பரவலாகவில்லை

### சுகாதார அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றானது இன்னும் சமூக பரவலுக்கு உள்ளாகவில்லை என சுகாதார அதிகாரிகளும் கொரோனா தொற்று ஒழிப்புக்கான விசேட தொற்று நோயியல் பிரிவினரும் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரிவினருக்கும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைய கொரோனாவை தடுக்கும் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு இந்த விடயமே சான்று என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியார்ராச்சி இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் படிப்படியாக முடக்கத்தை தளர்த்துவதன் மூலம் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ள விதிகளை மக்கள் பின்பற்றுகிறார்களா என்பதை பிராந்திய அளவில் பொது சுகாதார ஆய்வாளர்கள் ஆராய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஆலோசனையை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அறிவுறுத்தப்படும் என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, மழை காலம் ஆரம்பித்துள்ளதால், டெங்கு நோய் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதால் டெங்கு ஒழிப்பு திட்டங்களில் கவனம் செலுத்துமாறு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (ம-3)

## முழங்காலில் அமர்த்தி...

இது தொடர்பில் தெரியவருவதாவது.

நேற்று மாலை மருதனார் மட சந்திக்கு அருகிலுள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் இரு நபர்கள் தமக்குள் முரண்பட்டுள்ளனர். இருவருக்கு இடையில் வாக்குவாதம் கைகலப்பாக மாறிய போது அருகில் இருந்த பொலிஸ் காவலரனில் உள்ள பொலிஸார் இருவரையும் சமாதானப்படுத்த முற்பட்டுள்ளனர்.

அப்போது குறித்த நபர்கள் இருவரும் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளனர். அதை அவதானித்த இராணுவத்தினர் இரு நபர்களையும் அழைத்து சரமாரியாக தாக்கியுள்ளனர்.

பின்னர் முழங்காலில் அமர்த்தி வைத்திருந்த பின்னர் சுன்னாகம் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர். (ம-3)

## விடுதலைப் புலிகளின் உருவப்...

விடுதலைப் புலிகளின் உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தியதாக அவர்கள் மீது பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினமான 08.03.2020ஆம் திகதியன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் பசுமைப்பூங்கா வளாகத்தில் நடாத்தப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முதற்பெண் கடற்கரும் புலி அங்கயற்கண்ணியின் உருவப் படமும், விடுதலைப் புலிகளின் சீருடையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்ததாக கொக்காவில் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில், கடந்த மார்ச் 13ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

இந்த விசாரணை நடைபெற்று இரண்டு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அதே விடயம் தொடர்பிலான மேலதிக விசாரணைக்காக இன்று பொலிஸ் நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு நேற்று இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-3,9,114)

## நேற்றும் 32...

இதன்படி தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 925 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு நேற்றிரவு அறிவித்துள்ளது.

அதேவேளை, தொற்றுக்குள்ளான 63 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதையடுத்துத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 445 ஆக உயர்ந்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 925 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 471 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 108 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கூட்டமைப்பு...

இத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூவர் தனது நற்சான்றுகளை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்து இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தினது கடமைகளை பொறுப்பேற்றார்.

கடமைகளை பொறுப்பேற்றதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவதற்கு தான் தயாராகவுள்ளதாக தெரிவித்தார்.

இரண்டு நாடுகளும் பல காலங்களாக இணைந்து செயற்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்ந்து இருக்கும் என இரா.சம்பந்தன் தூதுவருக்கு உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# கொரோனாவை காரணம் காட்டி தனியார்துறை ஊழியர்களின் தொழிலைப் பறிக்க முடியாது

## மாதாந்த கொடுப்பனவையும் கட்டாயம் கொடுக்க வேண்டும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

கொரோனாவை காரணம் காட்டி தனியார் துறை ஊழியர்களின் தொழிலை பறிக்க முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், "நாட்டின் இப்போதுள்ள நிலையில் நாட்டுக்கான இறக்குமதியை குறைத்தாக வேண்டும். இது குறித்து ஆரம்பத்தில் அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

அத்தியாவசிய உணவு மற்றும் மருத்துவ இறக்குமதியின் தடைகள் இல்லை. அத்துடன் கட்டுமானப்பணிகளுக்கான பொருட்கள் உள்ளிட்ட சில பொருட்களுக்கு இறக்குமதி அனுமதி உள்ளது.

தேசிய இறக்குமதியாளர். தொழிற் சாலை உரிமையாளர்களுக்கு பிரச்சினைகள் இருப்பின் நிதி அமைச்சை தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடி யும்.

அதேபோல் நாட்டில் அரச துறையினரைப் போல் மூன்று மடங்கு அதிகமானவர்கள் தனியார் துறையினரே யாவர். அவர்களே நாட்டின் பொருளாதாரத்தில் அதிக பங் களிப்பை செலுத்துகின்றனர். இந்த நாட்டில் அதிக சிரமங்களை எதிர் கொள்ளும் நபர்களும் அவர்களேயாவர்.

அரசாங்கத்திற்கு சுமையைக் கொடுக்காது அரசாங்கத்தை கொண்டு நடத்த பாரிய அளவில் கைகொடுக்கும் நபர்களும் அவர்களே. ஆனால் இன்று அவர்கள் உள்ளிட்ட சகல துறையினரும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில் தனியார் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவது எவ்வாறு என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலைமை மேற்கத்தேய நாடுகளில் உருவானால் அவர்கள் உடனடியாக நிறுவனத்தை மூடிவிட்டு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

எனினும் இங்கு அவ்வாறு இடம்பெற முடியாது. மிக அதிகமான ஊழியர்கள் தனியார் துறையிலேயே உள்ளனர். அவர்களை பாதுகாக்க வேண்டும். அதனாலேயே அரசாங்கம் ஊரடங்கு காலத்திலும் படிப்படியாக நிறுவனங்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கியுள்ளது.

ஒரு சில விடயங்களில் அவர்களுக்கான தற்காலிக நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக கடன் செயற்பாடுகள் தற்காலிகமாக மூன்று மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் ஏனைய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே இது குறித்து அமைச்சரவையில் அமைச்சர் தினேஷ் குணவர்தன உரிய காரணிகளை தெளிவுபடுத்தினார். முதலாளிமார் சம்மேளனத்துடன், தொழிற்சங்கங்கள், நிறுவனங்கள் அனைத்துடனும் அமைச்சர் பேச்சுவார்த்தைகள் பலவற்றை முன்னெடுத்துள்ளார். அது குறித்தும் தெளிவுபடுத்தினார்.

இதன்போது கோவிட் - 19 நோய் தாக்கத்தை கருத்தில் கொண்டு நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்கள் எவரதும் வேலைகள் பறிக்கப்பட முடியாது.

அது குறித்து தனியார் நிறுவன சங்கங்களுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். இதில் பிரதான இரண்டு காரணிகளாக நிறுவனங்கள் மீண்டும் தலைதூக்கும் வரையில் கொடுப்பனவில் 50 வீதத்தையேனும், குறைந்த பட்சம் 14 ஆயிரத்து 500 ரூபாயுக்கு குறித்த தொகையை மாதாந்த கொடுப்பனவாக தனியார் துறையினருக்கும் வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**வேலையாள் தேவை**

கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் புதிய வீட்டுக்கு காவலுக்கு ஆள் தேவை.
தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதமும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- (C-9584)
**077 190 3165**

**முச்சக்கரவண்டி சாரதி தேவை**

வெதுப்பகப் பொருட்களை விற்பனை செய்வதற்கு முச்சக்கரவண்டிச் சாரதி தேவை.

தொடர்புகளுக்கு:- **077 247 8736**


### சங்கத்தானையில் வாள்வெட்டு; 3 பேர் படுகாயம்

## மோட்டார் சைக்கிளில் மெதுவாக செல்லுமாறு கூறியதால் விபரீதம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளில் மெதுவாகச் செல்லுமாறு கூறியபோது ஏற்பட்ட பிரச்சினைக்கு சமரசம் செய்ய முயன்ற மூவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றுள்ளது.

இதில் இ.ராக்ஸ் (வயது - 32), செ.கதிர்காமநாதன் (வயது - 48), தில்லைநாதன் (வயது - 72) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் முதியவரின் கைவிரல் ஒன்று துண்டாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

சாவகச்சேரி சங்கத்தானையில் ஒருவர் அந்தப் பகுதியினால் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக செல்வதை வாடிக்கையாக வைத்துள்ளார். நேற்று முன்தினம் இரவு வீதியோரமாக 3 இளைஞர்கள் உரையாடிக் கொண்டிருக்க, குறித்த நபர் அதிவேகமாக வந்துள்ளார்.

அவரை மறித்து குறுகிய வீதியில் அதிவேகமாக செல்ல வேண்டாமென இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கிருந்து சென்ற நபர் 6,7 பேரை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்தபோது. அவர்கள் தப்பியோடி விட்டனர்.

இளைஞர்களிற்கும். குறித்த நபர்களுக்கும் சமரசத்தை ஏற்படுத்த அந்தப்பகுதியை சேர்ந்த சிலர் முயற்சித்தனர்.

இளைஞர்கள் தப்பியோடியதால் ஆத்திரமடைந்த குறித்த நபர்கள் சமரசம் செய்ய முயன்ற 3 பேர் மீது வாள்வெட்டு நடத்தியுள்ளனர். (ம-3)


**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**0768226240**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**
**021 567 1532**


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

**அருளானந்ததேவி மேகநாதன்**

(இளைப்பாறிய
கணித பாட ஆசிரியை -
யாழ். இந்து மகளிர் கல்லூரி)



மலர்வு:- 30.08.1953
உதிர்வு: - 16.04.2020

அம்மா

கடந்த மாதம் 16.04.2020 வியாழக்கிழமை காலை சிவபதமடைந்த எமது தாயார் திருமதி **அருளானந்ததேவி மேகநாதன்** அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினம் 16.05.2020 அன்று நடைபெறவுள்ளது. அன்னாரின் மரண நிகழ்வின்போது இவ் அசாதாரண சூழ்நிலையிலும் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்கட்கும், நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்கட்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் வைத்தியசாலையில் இருந்தபோது கைகொடுத்து உதவிய வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பல்வேறு வகையில் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பிள்ளைகள்**
**உமைகரன், அமலன்**

**60, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 9954**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.